# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 22 ஞாயிற்றுக்கிழமை (06-08-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:184


# அரசமைப்புத் திருத்த முயற்சிகளுக்கு எதிராகப் பிக்குகள் போர்க் கோலம்!

## சட்டநகலை ஆதரிக்கும் எம்.பிமார் தேசத்துரோகிகள் என வர்ணிப்பு

கொழும்பு,ஓகஸ்ட்06

**தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கு வழிசெய்யும் விதத்தில் அரசமைப்பைத் திருத்தும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு எதிராக மகாசங்கத்தினர் உட்பட்ட பிக்குமார் சங்கம் போர்க்கோலம் பூண்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

**இந்தச் சீர்திருத்த நகலுக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் வாக்களிக்கும் எம்.பிக்கள் "தேசத்துரோகிகள்" என்றும் அவர்கள் வர்ணித்துள்ளனர்.**

இவ்வாறு அரசமைப்புத் திருத்த நகலை ஆதரித்து வாக்களிக்கும் எம்.பிமார் மற்றும் அதற்கு ஆதரவாகச் செயற்படும் அரசியல்வாதிகள் போன்ற 'தேசத்துரோகிகளின்' மரணச் சடங்குகள், இறுதிக் கிரியைகள் போன்றவற்றில் கூட எந்த பௌத்த பிக்குவும் கலந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் உற்சவத்தில் சனத்திரள்

யாழ்ப்பாணம்,ஓக.6

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்றுக் காலை 10 மணிக்கு மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்ற கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்துவந்த ஆயிரக்கணக்கான அடியார்கள் நேற்றைய கொடியேற்ற உற்சவத்தைக் கண்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## வலி. மேற்குப் பிரதேசத்தில் ஊரடங்கு நேரத்தில் தளர்வு

யாழ்ப்பாணம்,ஓக6

இராணுவத்தின 513ஆவது பிரிக்கேட் அணியின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் ஊரடங்கு தளர்த்தப்பட்டிருப்பதாக அந்த பிரிக்கேட்டின் கட்டளைத் தளபதி தெரிவித்துள்ளார்.

காக்கைதீவு முதல் தெல்லிப்பழை வரையான பிரதேசங்கள் அடங்கிய - மல்லாகம்,சுன்னாகம், மூளாய், வட்டுக்கோட்டை போன்ற பகுதிகள் உட்பட-வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் இனிமேல் இரவு 8 மணி முதல் காலை 5.00 மணி வரை ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

(உ)

## செஞ்சிலுவை வழித்துணையுடன் கப்பல் நாளை புறப்படுகிறது

### திருமலையில் ஆரம்ப நிகழ்வு

கொழும்பு,ஓக.6

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொடி மற்றும் அந்த அமைப்பின் வழித்துணையுடன் 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் நாளை நண்பகல் திருகோணமலையில் இருந்து புறப்படும்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் இங்கு நடைபெறும் இந்த முதலாவது பயணிகள் கப்பல் சேவையை ஒட்டி நாளை முற்பகல் திருகோணமலை இறங்குதுறைப் பகுதியில் ஆரம்ப வைபவ நிகழ்வு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய ஏற்பாடுகளின்படி-நாளை திருமலையில் இருந்து புறப்படும் கப்பல் செவ்வாய் காலை பருத்தித்துறையை வந்தடையும். பின்னர் செவ்வாய் பிற்பகலே பருத்தித்துறையில் இருந்து புறப்பட்டு புதன் காலை திருமலைக்கு வந்து சேருவதுடன் கப்பலின் முதலாவது பயணம் பூர்த்தியாகும்.

புதன் பிற்பகல் திருமலையில் இருந்து இரண்டாவது சேவையை

(12ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று அடிப்படை விடயங்களில் கூட்டணி திருத்தம் கொண்டு வரும்

### சம்பந்தன் உதயனுக்குத் தகவல்

கொழும்பு,ஓக.6

உத்தேச அரசமைப்புச் சீர்திருத்த நகலில் மூன்று அடிப்படை விடயங்களில் திருத்தங்களைக் கொண்டு வர தமிழர் விடுதலைக் கூட்டணி முயன்று வருவதாக அக்கட்சியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

★ நாட்டின் ஆட்சி முறை பற்றிய விடயத்தில் ஒற்றையாட்சி முறை நீக்கப்படுவது பற்றிய ஏற்பாடுகள் சந்தேகத்துக்கு அப்பால்பட்ட விதத்தில் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

★ அரச காணி விடயத்திலும் பிராந்திய சபைகளுக்கு முற்று முழுதாக - தெளிவான - அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். முன்னைய காலத்தில் நடந்தவை போல் - திட்டமிட்ட - குடியேற்றங்களுக்கு இடமளிக்கக்கூடிய வாய்ப்பு ஏதும் இல்லை என்பதை உறுதிப்படுத்தும் ஏற்பாடுகள் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும்.

★ வடக்கு, கிழக்கு இணைப்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குரல் வானொலி ஒலிபரப்பு இந்தியாவிலிருந்தா?

### மக்களவையில் கேள்வி

புதுடில்லி,ஓக.6

விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஒலிபரப்புச் சேவையான 'புலிகளின் குரல்' வானொலி இந்தியாவிலிருந்து ஒலிபரப்பாகின்றதா?

இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று இவ்வாறு கேள்வி எழுப்பப்பட்டது.

பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ்நாட்டுப் பிரிவு உறுப்பினரான பொன். இராதாகிருஷ்ணன் நாடாளுமன்றத்தில் நேற்று எழுத்து மூலம் இக்கேள்வியை எழுப்பினார். அதனை அடுத்து தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சரும், சட்டத்துறை அமைச்சருமான அருண் ஜேட்லி இது தொடர்பாக விளக் மளித்தார். 'புலிகளின் குரல்' வானொலி இலங்கையின் வடபகுதியிலுள்ள காடு களில் இருந்தே ஒலிபரப்பாகின்றது. இலங்கைப் படையினரின் கண்கா ணிப்பில் இருந்து தப்புவதற்காக அடிக்கடி அதன் இடத்தையும் அலைவரிசையையும் மாற்றுகின்றனர். அது இந்தியாவில் இருந்து ஒலிபரப்பாவதில்லை. அப்படிக் கூறப்படுவது தவறு - என்று அவர் நாடாளுமன்றத்தில் விளக்கமளித்தார். (ஐ-7)

## சோனியாவுக்கு கறுப்புக்கொடி!

காங்கிரஸ்கட்சித் தலைவி திருமதி சோனியா காந்திக்கு கறுப்புக்கொடி காட்ட முனைந்ததாகக் கூறப்படும் தமிழர் சேனைக்கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் பலர் கோயம்புத்தூர் பொலீஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

இலங்கையில் இந்திய அமைதிப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக சோனியா காந்தி மன்னிப்புக் கோரவேண்டும் எனக் கோரியே இவர்கள் கறுப்புக்கொடி காட்ட முனைந்ததாகக் கூறப்பட்டது.


தரம் - 5
புலமைப் பரிசில் பரீட்சை
மாதிரி வினாத்தாள்
அங்கம் - 8
நாளைய உதயனில் !


## நாடாளுமன்றம் செல்லும் பாதை ஒழுங்கு மாற்றம்

### அரசமைப்பு விவாதத்தை முன்னிட்டு

கொழும்பு,ஓக.6

நாடாளுமன்றத்தில் அரசமைப்புச் சீர்திருத்த நகல் விவாதம் நடைபெறவுள்ளதை முன்னிட்டு கோட்டே ஸ்ரீஜெயவர்த்தனபுர வீதிகளில் நாளை தொடக்கம் ஐந்து நாள்களுக்கு போக்குவரத்து ஒழுங்குகள் மாற்றியமைக்கப்படவுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக் கருதியும், சபைச் சூழலில் ஆர்ப்பாட்டம் போன்றவற்றைத் தடுக்கும் பொருட்டும் இந்த ஏற்பாடாகும்.

நாளை 7ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதிவரை இவ்வாறு போக்குவரத்து நடவடிக்கைகள் மாற்றியமைக்கப்படும் என்று சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் றியன்ஸி பெரேரா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீஜெயவர்த்தனபுர மாவத்தையில் பத்தரமுல்ல வரையும் கோட்டே, பிற்றக்கோட்டே வீதியில் கிம்புலாவல வரையும் ஜப்பான் நட்புறவு வீதியில் உள்ள பாலத்திலிருந்து கிம்புலாவல சந்தி வரையும் குறிப்பிடப்பட்ட தினங்களில் காலை 8மணி முதல் நாளாந்தப் போக்குவரத்து நடவடிக்கைகள் மாற்றியமைக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (அ-5)



கைதடியில் இருந்து அண்மையில் அழைத்துவரப்பட்ட முதியோர்களுக்கு மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியில் தங்குமிட வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. 120 முதியோர்கள் நேற்று வடமியடைப்பிலிருந்து கூட்டிவரப்பட்டு மூளாய் ஆஸ்பத்திரியில் அமைக்கப்பட்ட விடுதிகளில் தங்கவைக்கப்பட்டனர். அவர்களில் ஒரு பகுதியினரைப் படங்களில் காணலாம். நேற்று அங்கு நடைபெற்ற முதியோர் கௌரவிப்பு நிகழ்வில் வலி.மேற்குப் பிரதேசசபைத் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான ந.திரிலோகநாதன் உரையாற்றுவதையும் காணலாம்.

(படங்கள்:-டொ.இராஜேஸ்வரன்.)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ராஜா

(யாழ்ப்பாணம்)

எம்.ஜி.ஆர்.,
ஜெயலலிதா
மற்றும் பலர் நடிப்பில்

**குடியிருந்த கோயில்**

காட்சிகள்:
10.30, 2.00 (புதிய நேரம்)

(C/12325)

# நாகம்ஸ்

சுன்னாகம்.
4ஆவது வெற்றி வாரமாக
ரஜனி, சௌந்தர்யா,
நடிப்பில

**படையப்பா**

(ரீல்ஸ்)
காட்சிகள்:
11.00, 2.30 (புதிய நேரம்)

(77063)



# வாழ்த்துகின்றோம்

மாதகல்
*சிவாகமசுரபி*
**சிவஸ்ரீ கதிர். செல்லப்பாக் குருக்களின்**

*சைவசமய சேவைகளைப் பாராட்டி எடுக்கும் இன்றைய*
**மணிவிழா நாளில் நாமும் வாழ்த்துகின்றோம்.**

★ *பாடசாலை உபகரணங்கள* ★ *காகிதாதி வகைகள்*
★ *வாழ்த்து மடல்கள* ★ *அழகுசாதன, அன்பளிப்புப் பொருள்கள*
மற்றும்
★ காலணி வகைகள்

*மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.*

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்கள்
உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்.

உள்ளூர் - 070 - 212740
வெளியூர் - 0094 - 70 - 212740

## மல்ரி சென்ரர் அன் கொமினிகேசன்

மாதகல் வீதி, (C/12408) பண்டத்தரிப்பு.


# ஐ.தே.க. நடந்துகொண்ட விதம் தமிழருக்குக் கவலை தருகிறது

## ரணிலிடம் சித்தார்த்தன் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.6

நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்புச் சட்டநகல் சமர்ப்பிக்கப்பட்ட சமயம், ஐ.தே.கவின் பின்வரிசை எம்.பிக்கள் நடந்துகொண்டவிதம் தமிழ் மக்களுக்கு மனவருத்தத்தையும் மனக்கசப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

மேற்கண்டவாறு புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிய சமயமே சித்தார்த்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க "தற்செயலாக நடந்த சம்பவம் இதுவாகும். தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை அல்ல. ஐ.தே.கவின் பின்வரிசை எம்.பிக்களை விலைக்கு வாங்கப் போவதாக அரசு கூறிவருகின்றது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் அப்படி நடந்தார்கள்" என்று கூறினார்.

"தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்க இந்த நகல் உதவவில்லை என்று தமிழ்க்கட்சிகள் கூறுவதை நாம் ஏற்கிறோம். தமிழ்க் கட்சிகளுடன் கலந்துரையாடி அவர்களுடைய விருப்புக்கள், யோசனைகள் உள்ளடக்கியதாக அரசமைப்பை மாற்றவேண்டும் என்றே விரும்பினோம். ஆனால் அரசு அவசர அவசரமாக முடிவு செய்துவிட்டது" என்று ரணில் கூறினார். (இ-3)

# கலாசார உத்தியோகத்தர்கள் நிரந்தர நியமனம் பெறுவர்

## நடத்தை, வரவு விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.6

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு மேற்கொண்டுள்ளது.

நிரந்தர நியமனம் தொடர்பான நடவடிக்கைக்கென கலாசார உத்தியோகத்தர்களின் கடந்த ஒரு வருடகால செயற்றிட்டங்கள் மற்றும் நடத்தை வரவு தொடர்பான விவரங்களை சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்கள் உறுதிப்படுத்தி தமக்கு அனுப்பிவைக்க வேண்டுமென மாகாண பண்பாட்டலுவல்கள் பிரிவு உதவிப் பணிப்பாளர் எஸ். எதிர்மன்னசிங்கம் அறிவித்துள்ளார்.

கலாசார உத்தியோகத்தர்கள் நியமனம் பெற்ற காலம் முதல் தொடர்ந்து 10 மாதங்கள் வலயக் கல்வி அலுவலகங்களில் கடமையாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-7)


உ

# மாதகல், இந்துசமய அபிவிருத்திச் சங்கத்தினர்

'சிவாகம சுரபி'

**சிவஸ்ரீ கதிர். செல்லப்பாக் குருக்களின்**

சைவ சமய சேவைகளைப் பாராட்டி எடுக்கும்

# மணி விழா



காலம்:- **இன்று (06-08-2000) ஞாயிறு பி.ப. 2.00 மணி (புதியநேரம்)**
இடம்:- **மாதகல்-அரசடி சித்திவிநாயகர் ஆலயம்**
தலைவர்:- திரு. சு. கதிரமலை அவர்கள் *(தலைவர், மாதகல் இந்துசமய அபிவிருத்திச் சங்கம்,*

## நிகழ்ச்சி நிரல்

**பிற்பகல் 2.00 மணிக்கு விழா நாயகரை அவரது இல்லத்திலிருந்து மங்கள வாத்திய சகிதம் விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்து வருதல்**

1. மங்கள விளக்கேற்றல்
2. இறைவணக்கம்
3. வரவேற்புரை:- திரு சி. ஆனந்தராசா *(செயலாளர், இந்துசமய அபிவிருத்திச் சங்கம்)*
4. ஆசியுரை:- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள் *(நல்லை ஆதீன முதல்வர்)*
   பிரம்மஸ்ரீ இ. சுப்பிரமணியக் குருக்கள் *(சித்திவிநாயகர் தேவஸ்தானம், அரியாலை)*
   பிரம்மஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் *(தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்)*
   பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் *(சிவன் தேவஸ்தானம், கீரிமலை)*
   அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவா *(தலைவர், இந்து சமயப்பேரவை, யாழ்ப்பாணம்)*
5. மணிவிழா நாயகரைக் கௌரவித்தல்:-
   ★ *பொன்னாடை போர்த்தல்* ★ *'சிவாகமசுரபி' விருது வழங்குதல்*
   ★ *பட்டம் வழங்குதல்* ★ *பொற்கிழி வழங்குதல்* ★ *வாழ்த்துப்பா பாடி வழங்குதல்*
6. தலைமையுரை
7. மணிவிழா மலர் வெளியீட்டுரை:
   திரு. சு.சுந்தரசிவம் *(உதவிக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)*
8. ஆய்வுரை: பேராசிரியர் எஸ். சண்முகதாஸ் *(உயர்பட்டப்படிப்புகள் பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)*
9. வாழ்த்துரைகள்:
   பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ணஐயர் *(தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)*
   பிரம்மஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் *(கதிரமலை சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்.)*
   பிரம்மஸ்ரீ க.மு.சோமசுந்தரக் குருக்கள் *(பறுவதவர்த்தினி அம்பாள் ஆலயம், உரும்பிராய்.)*
   திரு. நா.வேதநாயகன் *(பிரதேச செயலர், வலி.தென்மேற்கு)*
   பேராசிரியர் நா.ஞானகுமாரன் *(தலைவர், மெய்யியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)*
   சைவப் புலவர் சு.செல்லத்துரை *(ஓய்வுபெற்ற அதிபர், இளவாலை மெய்கண்டான் ம.வி)*
10. பாராட்டுரைகள்:
    திரு. வீரவாகு *(ஓய்வுபெற்ற அதிபர்)*
    திரு. மு.பாலசிங்கம் *(உதவி திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)*
    டாக்டர் க.இளங்கோஞானியார் *(யாழ். போதனா வைத்தியசாலை)*
    திரு. பு.ரவிராஜன் *(விரிவுரையாளர், பௌதிகவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)*
    திரு. கா.அழகரத்தினம் *(அதிபர், மாதகல் சென்.யோசவ் மகாவித்தியாலயம்)*
    திரு. வி.சுப்பிரமணியம் *(அதிபர், மாதகல் நுணசை வித்தியாலயம்)*
    திரு. சு.வயிரவநாதன் *(பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம)*
    திரு.பொ.சோமசுந்தரம் *(மாதகல் தெற்கு, கிராம முன்னேற்றச் சங்கம்)*
11. பதிலுரை: விழா நாயகன்
12. நன்றியுரை:
13. இறைவணக்கம்:

பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு இவ்விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சு.கதிரமலை
*தலைவர்*

சி.ஆனந்தராசா
*செயலாளர்*

விழாச் சிறப்புற வாழ்த்துவோர்

* *ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்* பிரதானவீதி. பண்டத்தரிப்பு.
* *பழ வியாபாரம்* சந்தை, பண்டத்தரிப்பு - *உரிமையாளர்:-திரு.தெய்வேந்திரம்*
* *சத்யா அன் கோ* தங்கப்பவுண் நகை வியாபாரம்

சத்யா அன் கோ, 22, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம் (77002)



# YOGI HOME SCIENCE ACADEMY

**குறுகிய கால புதிய வகுப்புக்கள் 19-08-2000 அன்று முதல் ஆரம்பமாக உள்ளன.**

❖ தையல் ❖ கேக் ஐசிங்
❖ சமையற்கலை ❖ பூக்கள் தயாரித்தல்
❖ துணியில் வர்ண அலங்கரிப்பு

*இத்துடன் விசேட பயிற்சி நெறிகள்*

❖ முக ஒப்பனை ❖ தலை அலங்காரங்கள்
❖ மணமகள் அலங்காரம்
❖ மாச்சீனி மலர் அலங்காரங்கள்
❖ மேலைத்தேய ஜீசிங் அலங்காரங்கள்

*சேர விரும்பும் புதிய மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும். தவிர்க்கமுடியாத காரணங்களினால் இடைநிறுத்தப்பட்ட வகுப்புகளில் பயின்ற மாணவிகளும் உடன் தொடர்பு கொள்ளவும்.*

75, அம்மன் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக) (77060)



# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08
-
12
-
1940



மறைவு
30
-
07
-
1998

திருமதி
## தவமணிதேவி மகாதேவன்

எம்மரிய தேவியரே! காலமெல்லாம்
கலங்க வைத்திட்டோடிய கொடுமைதனை
நினைத்தழுவோமோ தவிக்கின்றோம்
துடித்தழுது மாய்கின்றோம் வாரீரோ?

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*643 (191), கே.கே.எஸ் வீதி,*
*நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*

(77026)

### தீவிரவாதிகளைக் கண்டித்து நடந்த

# வேலை நிறுத்தப் போராட்டத்தில் வன்முறை வெடித்து 5 பேர் பலி

புதுடில்லி, ஓக. 6

காஷ்மீரில் தீவிரவாதிகள் பொது மக்கள் மீது மேற்கொண்ட கொலைத் தாக்குதல்களைக் கண்டித்து குஜராத் மாநிலத்தில் விஸ்வஹிந்து பரிஷத்தின் அழைப்பின் பேரில் நடந்த ஒருநாள் பொது வேலை நிறுத்தப் போராட்டத்தில் அதிகளவில் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

இவற்றில் 5 பேர் கொல்லப்பட்டனர். சூரத் நகரில் கடைகளுக்கு தீவைக்கப்பட்டதாகவும் அங்கு ஆயுதம் தாங்கிய கும்பல்கள் நடத்திய தாக்குதல்களில் 3 பொது மக்கள் கத்திக் குத்துக்கு இலக்காகி மரணமடைந்தாகவும் கூறப்படுகிறது.

விஸ்வ ஹிந்து பரிஷத் மும்பை மற்றும் டில்லியிலும் கடையடைப்புப் போராட்டங்களை நடத்தியது அந்த நகரங்களில் வன்முறைச்சம்பவங்கள் நடைபெற்ற போதிலும் இழப்புகள் குறித்து எந்தவிதத் தகவல்களும் கிடைக்க வில்லை என்று செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன. (ஒ)

# ஸ்பெயினில் குடியேறியவர்கள் அனுபவித்த சலுகைகள் ரத்து

பிரெஸ்ஸெல், ஓக. 6

ஸ்பெயினில் குடியேறிய வெளிநாட்டவர்கள் இது வரை அனுபவித்துவந்த சிறப்புச் சலுகைகளை அந்நாட்டு அரசு பறித்து விட்டது

ஸ்பெயினில் சட்டபூர்வமாகவோ அல்லது சட்ட விரோதமாகவோ குடியேறிய அனைவருக்கும் கல்வி, மருத்துவம் போன்ற அனைத்துத் துறைகளிலும் ஸ்பானியர்களுக்கு கிடைக்கும் சலுகைகள் தாராளமாகக் கிடைத்து வந்தன.

அத்துடன் குடியேறியவர்கள் அரசியலில் ஈடுபடவும் தொழிற்சங்க உறுப்பினராகவும் எந்தவிதத் தடைகளும் ஸ்பெயினில் இருந்ததில்லை.

இந்நிலை நீடித்தால் ஸ்பானியர்களுக்கான முக்கியத்துவங்கள் குறைந்து போகும் வாய்ப்பு உருவானதை அடுத்து சமீபத்தில் அந்நாட்டு நாடாளுமன்றம் குடியேற்றவாசிகள் இதுவரையும் அனுபவித்து வந்த சிறப்புச் சலுகைகளை ரத்துச் செய்யும் தீர்மானத்தை நிறைவேற்றியதன் மூலம் அவற்றைப் பறித்துள்ளது. (ஒ)

# இந்திய அரசு-முஜாஹிதீன் இடையே பேச்சுக்கான குழுக்கள் அறிவிப்பு

புதுடில்லி, ஓக, 6

யுத்த நிறுத்தம் அறிவித்துள்ள ஹிஸ்புல் முஜாஹிதீன் இயக்கத்துக்கும் மத்திய அரசுக்கும் இடையே பேச்சுக்களை நடத்துவதற்கு இரு தரப்பும்இணக்கம் தெரிவித்து பேச்சுவார்த்தைக் ான குழுக்களை அமைத்துள்ளன

இந்திய உள்துறைச் செயலர் கமல்பாண்டே தலைமையிலான இரு நபர் குழு முஜாஹிதீன் தலைவர்களில் ஒருவரான சர்தார் குரேஷியுடன் காஷ்மீரில் நடத்திய ஆலோசனைகளை அடுத்துப் பேச்சுக்கான இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

### உலக அரங்கில்

பேச்சுவார்த்தையில் இந்தியத்தரப்பில் உள்துறைச் சிறப்புச் செயலர் கௌத்தலும், ஹிஸ்புல்முஜாஹிதீன்கள் சார்பில் தளபதி கலீத் சையதுல்லாவும் பங்குபற்ற உள்ளதாகக் கூறப்படுகிறது. இரு தரப்பிலும் வேறு சிலரும் கலந்து கொள்வார்கள்.

இதற்கிடையில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளின் பாகிஸ்தானைச் சேர்க்கா விட்டால், எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் யுத்த நிறுத்தத்தை விலக்கிக் கொள்ளப் போவதாக பாகிஸ்தானில் உள்ள ஹிஸ்புல் முஜாஹிதீன் தலைவர் ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த இந்தியப் பிரதமர் வாஜ்பாய், பயங்கரவாதமும் சமாதானப் பேச்சும் ஒரே பாதையில் செல்ல முடியாது என்றும் பேச்சுவார்த்தைகளில் பாகிஸ்தானைச் சேர்க்க முடியாது என்றும் உறுதியாகத் தெரிவித்தார்.

முன்னதாக தீவிரவாதிகளின் தாக்குதல்களில் 100 பொதுமக்கள் உயிரிழந்த இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்களில் பாகிஸ்தான் ஆதரவு பெற்ற லக்கத் சொய்பா என்ற அமைப்பின் அடையாள முத்திரைகள் இருந்ததாக இந்திய அரசு தெரிவித்தது. (ஒ)

## ஒரு வருடம் நீடிப்பு

பிரீடவுன், ஓக, 6

சியாராலியோனில் உள்ள ஐ. நா. சமாதானப் படைகளின் பணிகளை மேலும் ஒரு மாதகாலம் நீடிக்க ஐ. நா. சபை அனுமதித்துள்ளது.

சியாறாலியோனில் 10 வருடகாலமாக நடைபெற்ற உள்நாட்டுச் சண்டை முடிவுக்கு வந்தபின் ஐ. நா. சமாதானப்படை அங்கு கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது (ஒ)

# பிஜி கிளர்ச்சித் தலைவர் ஸ்பைட் நீதிமன்றத்தில் ஆஜரானார்

சுவா, ஓக. 6

கிளர்ச்சித் தலைவர் ஜோர்ஜ் ஸ்பைட் நேற்றுப் பிஜி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். அவரது தீவிர ஆதரவாளர்கள் சிலரும் அவருடன் ஆஜர் செய்யப்பட்டனர்

துப்பாக்கிகள் வைத்திருந்தது சட்டவிரோதமாகக் கூட்டம் நடத்தியது, இறந்த ஆதரவாளரின் உடலை நாடாளுமன்ற வளாகத்திற்குள் விதிமுறைகளுக்குப் புறம்பாகப் புதைத்தது உள்ளிட்ட கிரிமினல் குற்றச்சாட்டுக்கள் பொலீஸாரால் ஸ்பைட் மீது சுமத்தப்பட்டன.

தேசத் துரோகக் குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரணைகள் நடந்துவருவதாகப் பொலீஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து அடுத்த மாதம் 1 ஆம் திகதி மீண்டும் விசாரணைகள் நடைபெறும் என்றும்—

அதுவரை ஸ்பைட்டையும் மற்றவர்களையும் சிறைக் காவலில் வைக்கும்படியும் நீதிபதி அறிவித்தார்.

ஸ்பைட்டின் சட்டத்தரணி தாக்கல் செய்த பிணைமனு மீதான விசாரணை எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிஜியில் முன்னாள் பிரதமரை நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் பணயக் கைதியாக்கி ஸ்பைட் திடீர்ப்புரட்சி நடத்தியதை அடுத்து கடந்த மாதம் 26 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

## முதலமைச்சர்கள் மாநாடு

இந்திய மாநில முதலமைச்சர்கள் மாநாடு புதுடில்லியில் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நேற்று ஆரம்பமானது.

உள்நாட்டுப் பாதுகாப்புக் குறித்து இந்த மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்படும் என்று அதில் கலந்து கொண்ட உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி தெரிவித்தார். (ஒ)

# வீரப்பனைச் சந்திக்க இதுவரை கோபாலுக்கு அனுமதி இல்லை

சென்னை, ஓக. 6

தமிழக, கர்நாடக அரசுகளின் தூதராகக் காட்டுக்குள் நுழைந்த 'நக்கீரன்' கோபாலுக்கு, தன்னைச் சந்திக்கும் அனுமதியை வீரப்பன் இதுவரை வழங்கவில்லை என்று கூறப்படுகிறது. அதனால் கொட்டும் மழையில், காட்டுக்குள் வீரப்பனிடம் இருந்து வரும் ஆளுக்காகக் கோபால் காத்திருப்பதாக 'நக்கீரன்' பத்திரிகை அலுவலகத்தினர் தெரிவித்தனர்.

இதேசமயம்

சந்தனக் கடத்தல் வீரப்பன் தனது நிபந்தனைகள் அடங்கிய இரண்டு ஒலி நாடாக்களை தமிழக முதல்வருக்கும், கர்நாடக முதல்வருக்கும் அனுப்பியுள்ளார்.

புதுவையில் உள்ள ஒருவர் மூலமாக இரண்டு ஒலி நாடாக்களும் முதல்வர் கருணாநிதியிடம் சேர்க்கப்பட்டு பின்னர் அதில் ஒன்று கர்நாடகாவுக்கு பலத்த பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அந்த ஒலிநாடாக்களில் பதிவு செய்யப்பட்டுள்ள வீரப்பனின் நிபந்தனைகள் குறித்துத் தெரிவிக்க இரு மாநில அரசுகளும் மறுத்துவிட்டன. கன்னட நடிகர் ராஜ்குமார் உள்ளிட்ட 4 பேரை சந்தனக்கடத்தல் வீரப்பன் கடத்திச் சென்றுள்ளது தெரிந்ததே. (ஒ)

# மனிதஉரிமை மீறல் குறித்து ஐ.நா. அமைப்புத் தீர்மானம்

ஜெனீவா, ஓக. 6

மனித உரிமைகளைப் பேணுதல் மற்றும் பாதுகாத்தலுக்கான ஐ.நா. துணைக் குழுவில் அங்கம் வகிக்கும் நாடு ஒன்றில் ஏற்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சகஉறுப்பு நாடுகள் பேசுவதற்கும் தலையிடுவதற்கும் தடைகள் விதிக்கும் தீர்மானத்தைக் குழுவின் முழுக்கூட்டம் நிறைவேற்றியுள்ளது.

மேற்படி கூட்டத்தின் தலைவர் ஏ மோட்டர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் காஷ்மீரில் மனித உரிமைகள் மீறப்படுவதாக இந்தியா மீது குற்றஞ் சாட்டிய பாகிஸ்தானை அவர் கண்டித்தார். (இ-ஒ)

## ஜேர்மனியரின் சடலம் கண்டு பிடிப்பு

ஜம்மு, ஓக. 6

காஷ்மீரின் கார்கில் பகுதியில் உள்ள நுன்குன் சிகரம் அருகே துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்ட நிலையில் ஜேர்மனியைச் சேர்ந்த சுற்றுலாப் பயணியின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

கடந்த மாதம் 13 ஆம் திகதி லன்ஸ்காரி என்ற இடத்திலிருந்து கடத்தப்பட்ட சர்புட்ராக் என்பவரின் சடலமே இராணுவத்தால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

# மதக்கலவரத்தை நிறுத்த சர்வதேசத் தலையீடு

## மனித உரிமைக்குழு கோரிக்கை

ஜகார்த்தா, ஓக. 6

இந்தோனேசியாவின் மலாக்காத்தீவில் கடந்த 18 மாத காலமாக முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையே நடைபெற்றுவரும் மதக்கலவரங்களை நிறுத்த சர்வதேசத் தலையீடு அவசியம் என்று தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு கூறியுள்ளது.

சர்வதேச அமைதிப்படை ஒன்று மலாக்காத்திவுப் பகுதியில் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

சுமார் 4000 பேரைப் பலி கொண்ட மதக்கலவரங்களை அடக்க இந்தோனேசியாவில் மனித உரிமைகள் ஆணைக்குழு வெளிநாட்டு உதவியைக் கோரியிருப்பது இதுவே முதல் தடவை ஆகும். (ஒ)

### சிம்பாப்வேயில்

# வெள்ளையர் நிலங்களை பறித்து கறுப்பருக்கு தரும் முயற்சி தீவிரம்

ஹராரே, ஓக 6

சிம்பாப்வேயில் வெள்ளையருக்குச் சொந்தமான நிலங்களைச் சுவீகரித்து கறுப்பின மக்களுக்கு வழங்கும் நடவடிக்கையைத் தீவிரப்படுத்தப் போவதாகப் புதிய அரசு தெரிவித்துள்ளது.

சிம்பாப்வேயில் ஏற்கனவே வெள்ளையரின் 804 பண்ணை நிலங்களைக் கையகப்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் 5 லட்சம் கறுப்பின மக்களுக்கு விநியோகிக்க வெள்ளையருக்குச் சொந்தமான சுமார் 3000 விவசாயப் பண்ணைகளைப் பறிமுதல் செய்ய அரசு தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

வெள்ளையரின் நிலங்களை சுவீகரித்துக் கறுப்பின மக்களுக்குத் தரும் திட்டத்தை அதிபர் ரொபேர்ட் முகாபே தேர்தலுக்கு முன்னர் அறிவித்திருந்ததும், அதனைத் தொடர்ந்து கறுப்பினமக்கள் வெள்ளையர் மீது தாக்குதல் நடத்தி அவர்களின் நிலங்களை பறித்ததும், பிரிட்டனின் தலையீட்டால் இந்த நிலை கட்டுப்படுத்தப்பட்டதும் தெரிந்தவையே. (ஒ)

### தமிழ் வழிக் கல்வி தொடர்பான

# சான்றோர் பேரவையின் மனுவை இந்திய உச்ச நீதிமன்றம் ஏற்றது

சென்னை, ஓக. 6

தமிழ் நாட்டில் ஆரம்பக் கல்வி தமிழ்மொழியில் கற்பிக்கப்பட வேண்டும் என்ற அரச ஆணையை நடைமுறைப்படுத்தச் சென்னை உயர் நீதிமன்றம் விதித்த தடையை ரத்துச் செய்யக் கோரி தமிழ்ச் சான்றோர் பேரவை தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதி மன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.

இத் தகவலைப் பேரவையின் நிறுவுநர் ந. அருணாசலம் தெரிவித்தார்.

தமது அமைப்பைச் சேர்ந்த 100 பேர் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியதை அடுத்தே தமிழக அரசு தமிழ்வழிக் கல்வி குறித்த ஆணையைப் பிறப்பித்ததாகவும் ஆங்கில மோகம் கொண்டவர்களின் முயற்சியால் அந்த ஆணை தடை செய்யப்பட்டுள்ளதாகவும் கூறிய அருணாசலம் குறித்த அரச ஆணையைச் செயற்படுத்த இறுதிவரை முயற்சிக்கப்போவதாகவும் உறுதி தெரிவித்தார்.

5 ஆம் வகுப்பு வரையிலான ஆரம்பக்கல்வியைத் தமிழ் மொழியில் கற்பிக்கவேண்டும் என்ற தமிழக அரசின் ஆணையை உயர்நீதிமன்றம் ரத்துச் செய்ததும் அதனை எதிர்த்துத் தமிழக அரசு செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் அரசு ஆணைக்கான தடையை விலக்க மறுத்ததும் தெரிந்தவையே. (ஒ)

## சைவ வித்தியாவிருத்திச் சங்கம்
## நிறைவாழ்வு இல்லம்

திருநெல்வேலி.

மேற்படி இல்லத்தில் தங்கியிருந்து தற்போது பெற்றோர்/பாதுகாவலருடன் வாழ்கின்ற சிறார்களை மீண்டும் **10 - 08 - 2000** அன்று இல்லத்திற்கு வரும்படி அறியத்தருகின்றோம்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தலைவர்

(சி/ 12404)



உ

## மணிவிழா பெருமை பெறும் சிவாகம சுரபி

அந்தணரில் அறிவுடையோனாகி,
ஆகமம், வைதிகம் இரண்டிலும் வல்லவனாகி,
சார்பவரை பரிந்துபசரிக்கும் பண்புடையோனாகி
பெருமையுறாது வாழும் மாதகல்

### கதிர் செல்லப்பாக் குருக்கள்

மணிவிழாச் சிறப்பு எல்லோருக்கும் உரியதாகும்.

விழாப்பொழிவுறவும் விழாக் குழுவினர் நிறைவடையவும், குருக்கள் பல காலம் எமக்கு வழிகாட்டவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இறைபணியிலுள்ள
நா. சர்வேஸ்வரக் குருக்கள்

ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்,
சுன்னாகம். (77043)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 | 07 |
| 07 | 07 |
| 1925 | 2000 |

திருமதி
### மேரி பெர்ணடேற் வேதநாயகம்

''உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்''
(அரு. 11: 25)

அன்னாரை அன்புடன் நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

சிற்றம்பலபுரம்,
அச்சுவேலி. (77034)

## மரண அறிவித்தல்

### திருமதி நவரத்தினசிங்கம் சரஸ்வதி
(அம்மம்மா)
(வடலியடைப்பு)

வடலியடைப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட வரும் மாத்தளையில் வசித்து வந்தவருமான சரஸ்வதி நேற்று (05-08-2000) சனிக்கிழமை அதிகாலை காலமாகி விட்டார்.

அன்னார் அராலி சு. நவரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும், சிவராஜாவின் (மாத்தளை) அன்புத் தாயாரும், இரஜினி (யசோ) யின் அன்பு மாமியாரும், கபிலன், மிததிரா, சர்மிலா, நிறஞ்சனா, கௌசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிவசுப்பிரமணியம் (வடலியடைப்பு), மகேஸ்வரி (லண்டன்), அருணானந்தம்(மாத்தளை) ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலம் சென்றவர்களான விஸ்வநாதர், நடராஜா மற்றும் தில்லையம்பலம் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (6-8-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மாத்தளை இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. மகேஸ்வரன் (மாம்பழம்)
பெறாமகன்
சி. சுகுமார் (மருமகன்)

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (77055)

## மென்பந்து கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 6

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் 12 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி ஜி. பி. எஸ். விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை ஒப்படைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

(இ-4)

## தொழில்நுட்பக் கல்லூரிக்கு ரூ. 8 லட்சம்

யாழ்ப்பாணம், ஓக. 6

கொழும்பில் உள்ள தொழில்நுட்பக்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் யாழ். தொழில்நுட்பக்கல்லூரிக்கு 8 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியின் மூலம் தொழில்நுட்பக் கல்லூரிக்கு சுற்றுமதில்கள் அமைக்கப்படவுள்ளதுடன் கட்டடத்திருத்த வேலைகளும் மேற்கொள்ளப் படவுள்ளதாக கல்லூரியின் அதிபர் தெரிவித்துள்ளார்.

மேற்படி வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட்டு இந்த ஆண்டு இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-10)

# தேர்தல் சீர்திருத்தம் தமிழருக்குப் பாதகம்

## புளொட் எம். பி. கருத்து

கொழும்பு, ஓக. 6

தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான சட்டத் திருத்தம் அமுலானால் தமிழர் தமது பேரம் பேசும் வாய்ப்பை இழந்துவிடுவர் என்று புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:

கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஐ. தே. கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த சமயங்களில் தமக்கு ஏற்றபடி அரசமைப்புக்களை மாற்றி வந்தன. தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

இன்று தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சி எடுக்கப்படுகின்றது. அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற முடியாது என்ற காரணத்தால், தேர்தல் சீர்திருத்தம் கொண்டுவரப்படுகின்றது.

இந்தச் சீர்திருத்தம் மூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அடுத்த அரசு பதவிக்கு வந்தால் தமிழருக்கு எதிராக அரசமைப்பைத் திர்க்கமாட்டாது என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

இன்றுள்ள விகிதாசார முறைப்படி தமிழர் தமது பிரச்சினைக்குத் தீர்வுகாண பேரம் பேசமுடியும். புதிய முறைப்படி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறப்பட்டால் தமிழர் பேரம் பேசும் தன்மையை இழந்து விடுவர் - என்றார் அவர்.

புதிய தேர்தல் சீர்திருத்தத்தின்படி 73 ஆசனங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தற்சமயம் உள்ள 225 ஆசனங்களை 282 ஆசனங்களாக உயர்த்துவதற்கான சட்டத் திருத்தத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்த சமயம் — ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இ. தொ. கா ஆகியன தெரிவித்த யோசனையின் படி 298 ஆக நாடாளுமன்ற ஆசனங்களை உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான சட்டத் திருத்தம் உயர் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டுப் பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

(இ-3)

# தமிழ்ப்பற்றும் மதப்பற்றும் கொண்ட செந்தண்மையாளன் ஆத்மநாதசர்மா

சிவப்பணி ஆற்றிய செந்தண்மையாளன் க. வை. ஆத்மநாதசர்மா அவர்களின் 25 ஆவது வருட நினைவு தினம் இன்று ஆகும்.

அந்தணர் ஆற்றவேண்டிய ஆறு கடமைகளுள் ஓதல். ஓதுவித்தல் என்பவை முதலிடம் பெறுகின்றன. கல்வியைக் கற்றல், அதைக் கற்பித்தல் என்ற பொருளும் வேதத்தை ஓதல், ஓதுவித்தல் என்ற சிறப்புப் பொருளும் இவற்றுக்கு உண்டு.

ஈழத்திலே தமிழையும் சமஸ்கிருதத்தையும் தம் இரு விழிகளாகக் கருதும் அந்தணர் பலர் ஆர்வத்துடனும் அந்தரங்க சுத்தியுடனும் இப்பணிகளில் ஈடுபட்டு வருவது பலர் அறிந்ததே.

இவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர், இருபத்தைந்து ஆண்டுகளின் முன்னர் தன் பூதவுடலை விட்டுப் புகழுடம்பு எய்திய பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாத சர்மா அவர்கள்.

### தமிழ், மதப்பற்றுள்ள பரம்பரையில் வந்தவர்

நக்ரங்களுள் சிறந்தது (நகரேஷு காஞ்சி) எனப் புகழப்படுவதும் இறைமலி நகர் எனப் போற்றப்படுவதுமான காஞ்சிபுரத்தில் இருந்து சில நூற்றாண்டுகளின் முன்னர் யாழ்ப்பாணத்துக்கு வந்து மூறுகாலத்தில் தமிழ் மன்னர்களின் இராசதானியாகத் திகழ்ந்த கந்தரோடையில் குடியேறிய குஞ்சிதபாதபட்டர் அவர்களின் பரம்பரையைச்சேர்ந்தவர் சர்மா அவர்கள்.

இப்பரம்பரையினரே கந்தரோடை வற்றாக்கைப்பதியில் விசாலாட்சி அம்பாள் சமேத காசி விஸ்வநாதப் பெருமானுக்கு ஆலயம் எடுப்பித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆத்மநாத சர்மா அவர்களின் தந்தையாரான க. வைத்தியேஸ்வர சாஸ்திரிகள் தமிழ், வடமொழி ஆகியவற்றில்பாண்டித்தியம் பெற்றிருந்தார்.

தமிழ், சமஸ்கிருத மொழிப் புலமை, எழுத்தாற்றல், இறை நம்பிக்கை, சேவை மனப்பான்மை போன்றவை நிறைந்த தன் தந்தையின் நிழலில் வளர்ந்த ஆத்மநாத சர்மா ஆங்கிலமொழியையும் கற்று கேம்பிரிட்ஜ் யூனியர் பரீட்சையில் தேறி, பின்னர் பயிற்றப்பட்ட தமிழாசிரியராகி வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலையில் ஆசிரியப் பணியை மேற்கொண்டார்.

தன் பொதுக் கல்விப் பணியுடன் தமிழ் சைவப் பணிகளையும் செய்யத் தொடங்கினார் ஆத்மநாதசர்மா.

முகாந்திரம் யா. தி. சதாசிவஐயர் அவர்களின் பெருமுயற்சியால் உருவான ''பிராமண சமாஜத்தின்'' காரியதரிசி, பொருளாளர், உப

சி. சிவசரவணபவன்

தலைவர் பதவிகளைப் பல்வேறு காலப்பகுதிகளில் வகித்தும் நிர்வாகசபை அங்கத்தவராக இருந்தும் சமாஜத்தின் நோக்கங்கள் நிறைவேற உழைத்தவர் சர்மா. சமாஜ வெளியீடான ''சுவதருமபோதம்'' என்ற காலாண்டுச் சஞ்சிகை ஒழுங்காகவும் தரமாகவும் வெளிவருவதற்கு அயராது உழைத்தவர்.

### சமய நூல்கள்

தான் மட்டுமல்லாமல், மற்றையோரும் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெற வேண்டும் என விரும்பிய சர்மா எல்லோருக்கும் உதவும் வகையில் சமய நூல்களை வெளியிடத் தீர்மானித்தார்.

சர்மா வெளியிட்ட விநாயக மஹோற்சவ விளக்கம், சைவ வினாவிடை, திருமால் மகிமை, சுப்பிரமணிய புஜங்கஸ்தோத்திரம், அன்னைலலிதாம்பிகை அருட்பேராயிரம் என்பனவற்றுள் பின்னவையிரண்டும் மொழிபெயர்ப்புக்கள் ஆகும். ருத்ரம். சமகம், புருஷசூக்தம், ஆகிய வேதபாடல்களை இவர் மொழிபெயர்த்திருந்தும் அவை நூலுருப்பெறவில்லை.

சிவபரம்பொருளிலிருந்து சிறிதும் வேறுபடாத விநாயகப் பெருமானுக்கு நடத்தப்பெறும் கொடியேற்றம் தொடக்கம் தேர், தீர்த்தம் ஈறாகவுள்ள மஹோற்சவம் பற்றிய பூரண விவரங்களையும், விளக்கங்களையும் தருகின்றது இவரது ''விநாயக மஹோற்சவ விளக்கம்''

லலிதா ஸஹஸ்ரநாமத்தின் தமிழ்மொழி பெயர்ப்பே ''அன்னை லலிதாம்பிகை அருட்பேராயிரம்'' என்பது.

பாமர மக்களிடையே பக்தி உணர்வைக் கிளர்ந்தெழச் செய்து சமய அறிவை விருத்தி செய்வதற்கு வாய்ப்பான புராண படலங்களில் கலந்து கொள்வது சர்மா அவர்களுக்கு உவப்பான பணியாக அமைந்தது.

வடமொழித் தேர்ச்சியும் சமய ஞானமும் புராண இதிகாசங்களில் இவருக்கிருந்த ஆட்சியும் இவர் சொல்லும் பயன்களுக்கு ஆழத்தையும் அழகையும் அளித்தன.

கந்தபுராணம், பெரிய புராணம், திருவாதவூரடிகள் புராணம், திருச்செந்தூர் புராணம் முதலியவற்றுக்குப் பயன் சொல்வதில் இவர் சிறந்து விளங்கினார்.

ஓய்வு நேரம் முழுவதையும் சிவப்பணிக்கு அர்ப்பணித்த ஆத்மநாதசர்மா அவர்களின் நினைவைப் போற்றுவது நம்மவரின் நன்றி மறவா நல்லுள்ளத்தை எடுத்துக் காட்டுவதுடன் இவரைப்போன்று இனிய வாழ்வு வாழ்ந்து ஏற்றமிகு பணிகள் செய்வதற்கு ஏனையோரைத் தூண்டுவதற்கும் உதவும்.

முன்னர் பிராமண சமாஜமும் பின்னர் பிராமண சமூகசேவா சங்கமும் ஆற்றிய பணிகளை இப்போது முன்னெடுத்துச் செல்லும் ''நியந்த்ரீ'' இந்த நினைவு விழாவிலே தன்னை இணைத்துக் கொண்டிருப்பது பாராட்டுக்குரியது. ★

உதயன்

## சைவ சமூகத்தில் நச்சு வாயு

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்துக்குப் பக்தர்கள் வழமைபோலச் சென்று வழிபடக் கூடியதான சூழ்நிலை குடாநாட்டில் நிலவுமா என்று சுமார் ஒரு மாத காலத்துக்கு முன்னர் மக்கள் சந்தேகப்பட்டது உண்டு.

உற்சவ காலத்தில் அமைதியற்ற சூழ்நிலை தோன்றாவிடில் யாழ்ப்பாண நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இருந்து இடம்பெயர்ந்த பெருவாரியான மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பிவர முடியுமா என்ற நிச்சயமற்ற தன்மையும் கூடவே நிலவியது.

ஆனால் முருகனடியார்களின் பிரார்த்தனையும் வேண்டுதலும் வீண் போகவில்லை. நல்லூர்க் கந்தனின் திருவிழாக்களைக் கண்டும், முருகப் பெருமானைத் தரிசித்தும் அவன் அருள் பெறுவதற்கு நெஞ்சத்தால் அவனை இறைஞ்சும் பக்தர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்துச் சைவ மக்களின் பெரும் அருள் விழாவாகக் கருதப்படுவது நல்லூர் வருடாந்த உற்சவம். நல்லூர் முருகனை விழுந்து கும்பிட்டால் தாங்கள் பாவ வினை தீரும் என்ற நம்பிக்கையுள்ள பக்தர்களுக்கு இத்திருவிழாக்காலம் உண்மையிலேயே அருள் கிடைக்கும் காலமே. எண்ணற்ற சித்தர்களினதும் ஞானிகளினதும் பாதம் பதிந்த புண்ணியபூமி அது.

ஆனால் நல்லூர்த் திருவிழாக் காலத்தைக் கேளிக்கைக் காலமாக்கி அதன் சிறப்பையும் பக்தர்களின் அருள் நாட்டத்தையும் மாசுபடுத்தும், குந்தகம் தரும் கூட்டம் ஒன்றுண்டு.

அதனைவிடவும், நல்லூர் உற்சவகாலம் என்பது ஆலயத்தின் புனிதத் தன்மையைக் கெடுக்கும் விதத்தில் சைவ சமய விதிகளையும் தமிழர் ஒழுக்க நெறிகளையும் பண்பாட்டையும் சிதைக்கும் நாகரிகமற்ற அருவருக்கத்தக்க செயல்களில் ஈடுபடுவதற்கான காலம் எனக் கருதும் இன்னுமொரு கூட்டமும் உண்டு.

சைவ சமய விழாக்கள் என்றால் சமய, சமூக ஒழுக்கங்களை மீறி அன்புக்கும் அமைதிக்கும் முரணான ஒன்றுகூடல்களே என்று பிறர் கருதுமளவுக்கு, கேலி செய்யும் அளவுக்கு இன்றைய ஆலயத் திருவிழாக்கள் மாறிவிட்டன. புனிதமான சூழலில், அமைதியான சூழலில் கடவுள் மீது மனதை ஒருமுகப்படுத்தி, அவன் அருள் வேண்டி, அவனது திருநாமங்களை உச்சரித்து வழிபடுவதற்காகவே ஆலயங்கள் கட்டப்பட்டன.

ஆனால் அந்த நோக்கத்துக்கு முற்றிலும் எதிர்மாறான, முரணான தன்மைக்குத் திருவிழாக்கள் இப்போது மாறிவிட்டன; மாற்றப்பட்டுவிட்டன. நான் என்ற அகங்காரமும், இறைவனை மறந்த நிலையும் மேலோங்கி மனிதப் பண்பைச் சீர்கெடுக்கும் விகாரத்தன்மை மலிந்து வருகிறது.

உண்மையான பக்தர்கள், இறைவன் அடியார்கள் ஆலயங்களில் சமயாசாரங்களைக் கைக்கொண்டு கடவுள் வழிபாடு செய்ய முடியாத வேதனைக்குரிய நிலையையே சைவ ஆலயங்களில் இன்று காண்கின்றோம்.

சமயங்கள் வாழ்க்கை நெறிகளாகும். ஆனால இன்றோ வாழ்க்கை வேறு, சமயம் வேறு, ஆலயம் வேறு என்ற ஒவ்வாத போக்கு, நச்சுவாயு போன்று மிக வேகமாகப் பரவி வருகிறது.

இந்த நிலையை எவ்வாறு நீக்குவது என்பதில் அக்கறை கொள்வோர், அதற்கான உகந்த நடவடிக்கைகளை மேற்கொள்வோர் எவருமிலர் என்ற பரிதாபகரமான நிலை உருவாகியுள்ளது மேலும் கவலைக்குரியதாகும். இந்த நிலை நீடித்தால் வெகு விரைவில் யாழ்ப்பாணத்தின் சைவப் பாரம்பரியம், ஆசாரம், பண்புகள் என்பன மறக்கப்பட்டவையாகிவிடும். சைவ சமூகம் ஒன்று இங்கு வாழ்கிறது என்பது வெறும் பதிவுக்கேனும் இல்லாமற் போய்விடும் ஆபத்து தலைமேல் உள்ளது!

# நீதிமான்களின் வேதனைகள் நிரந்தரமானவை அல்ல

வேதாகமத்திலே 1ஆம் ராஜாக்கள் 21ஆம் அதிகாரத்திலே நாபோத் எனும் ஒருவனை நாம் காணலாம். ஆகாப் அரசனின் அரண்மனைக் கருகில் அவனுக்கு ஒரு திராட்சைத் தோட்டம் இருக்கிறது. தனது அரண்மனையை விஸ்தீரணமாக்கும் எண்ணத்தில் நாபோத்தினது திராட்சைத் தோட்டத்தை ஆகாப் அரசன் விலைக்குக் கேட்கிறான். தங்கள் உரிமைச் சொத்தை மற்றவர்களுக்கு விட்டுக் கொடுப்பது நாபோத்தின் பரம்பரையில் தங்கள் நாட்டினையே விலை பேசுவது போன்றது. இதனடிப்படையில் நாபோத் அரசனது வேண்டுகோளை மறுக்கிறான்.

அரசன் வீட்டில் சென்று கவலையாக இருக்கும்போது அரசி வந்து விடயம் என்னவென்று கேட்கிறாள். அரசன் விடயங் கூறவே, அரசி சூழ்ச்சி செய்து நாபோத்தைக் கொன்று, திராட்சைத் தோட்டத்தை பலாத்காரமாகக் கைப்பற்றுகிறாள்.

அப்போது நாபோத் எனும் தனி மனிதனுக்காக ஒருவரும் குரல் கொடுப்பாரில்லை. அவனது சார்பில் வதாட ஒருவருமில்லை. எனினும் ஒருவர் அவனுக்காக வாதிட முன் வருகிறார். அவனுக்காக நீதி வழங்கத் தயாராகிறார். அவர்தான், எங்கு மனிதகுலம் அடக்கி ஒடுக்கப்படுகிறதோ, எங்கு மனிதன் சிறுமைப்பட்டுக் கலங்கித் தவிக்கிறானோ, அந்த இடத்திலெல்லாம் நீதியின் குரலை எழுப்பச் செய்கின்ற; அவனை மீட்க ஆள்களை எழுப்புகின்ற இறைவன்.

அவர் எலியா எனும் தீர்க்கனை ஆகாபிடம் அனுப்பி "நாபோத்தினது பிணத்தை நாய்கள் நக்கிய அதே இடத்தில் உன் பிணத்தையும் நாய்கள் நக்கும்" என்றார். அவ்விடத்தில் ஆகாப் தனது தவறை உணர்ந்து கொண்ட படியால் அவனது தண்டனை குறைக்கப்படுகிறது. ஆனால் பின்பு, அவன் இறையடியார்களுக்குத் துரோகம் செய்தபடியால், அதே தண்டனைக்கு ஆளாகிறான்.

இந்தச் சம்பவத்தில் எதை நாம் காணுகிறோம்? எமக்காகக் குரல் எழுப்ப ஒருவருமில்லையே என ஏங்கித் தவித்து தனிமனிதனாகவோ அல்லது தனிச் சமுதாயமாகவோ நலிவடைந்துபோகிற சமுதாயத்துக்காகக் குரல் கொடுக்க இறைவன் எப்போதும் முன் வருவார். ஏனெனில் அந்தி தாண்டவமாடுகிற, அடக்கி ஒடுக்குதல் நிகழுகிற எல்லா இடங்களிலும் அவரது பிரசன்னம் இருக்கும்.

**அருள்திரு. பி.தேவதாஸ்**

இன்றைய உலகிலும் எத்தனை கள்ளத் தனங்களை நாம் காணுகிறோம். வஞ்சகமாக சூழ்ச்சி செய்து மற்றவர்களது பொருள்களையோ, சொத்துக்களையோ பலாத்காரமாகப் பறிமுதல் செய்கிற எவ்வளவு வஞ்சனை நிறைந்த உலகில் நாம் வாழ்கிறோம். தமது தொண்டைக் குழி இறுக்கப்படுகிறபோது தமக்காக, தமது சமுதாயத்துக்காக ஓங்கிக் குரல் எழுப்ப முடியாத கையாலாகாத எத்தனைபேரை நாம் காணுகிறோம்.

### ஞாயிறு நற்பிரசாதம்

நல்லவர்கள் தாழ, தீயவர்கள் ஓங்குகின்றார்களே என்பது இன்றைய மக்களின் ஏக்கப் பெருமூச்சாகும். அதற்கெல்லாம் நாபோத்தின் திராட்சைத் தோட்ட உவமை அருமருந்தாக அமையும். ஆகவே நீதிமான்களின் வேதனை, ஏமாற்றம், பெருமூச்சுக்கள் அனைத்தும் நிரந்தரமானவை அல்ல. தற்காலிகமானவையே. அதுபோல் நல்லவர்களை ஒடுக்குகின்ற தீயவர்களது வாழ்க்கையும் நிரந்தரமானது அல்ல. இறைவனின் நீதிமன்று முன் அவர்கள் குற்றவாளிகளாக அடையாளங் காணப்படுவர்.

### உதயவாக்கு

தன்னுடைய சொந்த வாழ்க்கையில் அடிக்கடி ஏற்படுகின்ற அனுபவங்களால் மட்டுமல்ல, பிறருடைய அனுபவங்களாலும் பாடம் கற்கும் பிராணி மனிதன் ஒருவனே.

- *டெனிக்லான்*

### நாளை

ஆடி 23
திங்கட்கிழமை
*திதி:* அட்டமி
முன்னிரவு 11.34 வரை
(அட்டமி-நவமி)
*நட்சத்திரம்:* சுவாதி
முற்பகல் 9.49 வரை
*சுபநேரம்:* 12.04 - 1.34
*ராகுகாலம்:* 7.34 - 9.04
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

## நல்லை நகரின் பெருமாளே!

பொங்கும் அழகும் புதிய மெருகும்
என்றும் விளங்கும் வடிவேலா
பங்கப் படுமெம் தங்கத் தமிழர்
தவிப்பு உனக்குத் தெரியாதோ
தெங்கும் மாவும் தேன் பலாவும்
ஓங்கும் ஊரின் நிலைகண்டும்
ஒன்று மறியா ஊமை போன்று
உறைந் திருப்ப தேனோசொல்
என்று முன்னை இதயத் தேத்தி
இறைஞ்சு மடியார் குரல்கேட்டு
நன்று செய்ய நாடி வருவாய்
நல்லை நகரின் பெருமாளே

- அன்னைதாசன்

## 'முருகம்மா' வந்தருள் புரிவாய்!

பாரதி 'கண்ணம் மா' எனக் கண்ணனைப்
பாடி மகிழ்ந்தது போல்
சீரமை நல்லை முருகனை எந்தம்
'முருகம் மா' என்றே
ஆரும் அழைக்கா வகையினில் அழைக்கும்
ஆர்வம் மிகவுடையேன்
சூரனின் உடலைக் கூறுசெய் நாள்முதல்
சீற்றம் தணியாதே
பாரினிற் கொடுமை கொடியரை அழித்துப்
பயத்தை வளர்க்கின்றாய்
ஆரும் எமக்கிலை ஐயா! இனியும்
அல்லற் படுத்தாதே
வீரம் ஒடுக்கித் தாய்மை யுணர்ச்சியை
வித்திட் டம் மாவாய்
வாரல் வேண்டும் 'எம்முரு கம்மா!'
வந்தருள் புரிவாயே

- சொக்கன்

## வென்றிடும் வேலைக் கண்டேன்

பன்னிரு விழிகள் கண்டேன்
பாதார விந்தங் கண்டேன்
உன்திரு வடிவங் கண்டேன்
உதவிடும் கரங்கள் கண்டேன்
வென்றிடும் வேலைக் கண்டேன்
மாமயில் அருகே கண்டேன்
என்குறை சொல்ல வந்தேன்
எழில் நல்லைப் பதிதனிலே!

- அரியாலை சி.வராகினி

# என்ன செய்யப் போகிறார்; என்ன செய்யப் போகிறார்?

"பௌத்த மதத்தையும் சிங்கள இனத்தையும் அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகள் நட்டாற்றில் விடப்போகின்றன" என அம்மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குடைய பௌத்த பீடாதிபதிகள் எதிர்க்கின்றனர்.

பல்வேறு பிக்கு அமைப்புக்கள் எதிர்க்கின்றன.

சிங்கள பௌத்தர்களின் பிறப்புரிமையைப் பாதுகாக்கவென உருவாக்கப்பட்ட சிங்கள உறுமய, பூமிபுத்திர போன்ற அமைப்புக்கள் எதிர்க்கின்றன.

தீவிர இடதுசாரிக் கட்சியாகத் தன்னைப் பிரகடனப்படுத்தும் ஜே.வி.பி. எதிர்க்கின்றது.

வேறு சில காரணங்களுக்காக ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கின்றது.

இருந்தும் -

புதிய அரசமைப்புச் சீர்திருத்த நகல், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது!

புரையோடிய புண்ணாகி வலிக்கும் இனப்பிரச்சினையைக் குணமாக்கக்கூடிய - பயங்கரவாதத்தை அறவே ஒழிக்கக் கூடிய - உயிர்ப்பலியை உடனடியாகவே நிறுத்தக்கூடிய - இனங்களுக்கிடையே சமாதானத்தையும் சமத்துவத்தையும் சகவாழ்க்கையையும் நிலை நிறுத்தக்கூடிய பொருளாதாரத்தை வலுப்படுத்தி நாட்டிலே பாலும் தேனும் பாயச் செய்யக்கூடிய - இந்த "சர்வ ரோக நிவாரணி"யை ஆதரித்து அரவணைத்து அன்புடன் ஏற்றுக் கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்புக்களைச் சிறிதும் சட்டை செய்யாத ஜனாதிபதியின் அஞ்சா நெஞ்சத்தை - முன்வைத்த காலைப் பின்வைக்க முயலாத நெஞ்சுறுதியை - பரந்த மனோபாவத்தை - வாக்குறுதியைக் காப்பாற்றிய நேர்மையைப் பலர் பாராட்டக் கூடும். வெளிநாட்டுத் தலைவர்கள் - செய்தி ஊடகங்கள் விளம்பர - விமர்சன - விதப்புரைகளை வெளியிடக்கூடும்!

நாடாளுமன்றப் பெரும்பான்மை இன உறுப்பினர்கள் திட்டத்தை ஆதரிக்கலாம்; எதிர்க்கலாம்; நடுவு நிலைமை வகிக்கலாம் வாக்கெடுப்பிற் கலந்து கொள்ளாமல் வெளிநடப்புச் செய்யலாம்!

இவற்றால் -

தமிழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேறுமா? அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படுமா?

நகல் பற்றி ஊடகங்கள் வெளியிடும் சில விபரங்கள் "ஆம்" என்று நம்பிக்கையுடன் சொல்வதைப் பின்போடச் செய்கின்றன!

இந்த நிலையில் -

நாடாளுமன்றத்திலுள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் என்ன செய்யப் போகிறார்கள்?

அனைத்துத் தமிழர்களின் உள்ளங்களையும் உலுப்பிக் கொண்டிருக்கும் கேள்வி இது!

சில வாரங்களின் முன்னர் வெளியிடப்பட்ட அரசமைப்பு திருத்த யோசனைகள் தமிழர்களின் அபிலாசைகளைச் சிறிதளவும் நிறைவேற்றாதபடியால் அவற்றை ஆதரிப்பதில்லை எனத் தமிழ்ப் பிரதிநிதிகள் ஒருமித்துச் சொன்னபோது -

எவ்வளவுதான் ஒருவரை ஒருவர் குற்றஞ் சாட்டுவதிலும் மட்டந் தட்டுவதிலும் திட்டித் தீர்ப்பதிலும் ஈடுபட்டாலும் தமிழ்ச் சமுதாயத்தை ஒட்டு மொத்தமாகப் பாதிக்கும் இவ்விஷயத்தில் திட்டவட்டமான ஒரு நிலைப்பாட்டை எடுத்து அதைத் தெட்டத் தெளிவாகத் தெரிவித்து விட்டதைக் கண்டு -

எவ்வளவு பெருமையுடனும் நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் தமிழினம் தலை நிமிர்ந்து நின்றது!

ஆனால் -

ஏற்கனவே தமிழர்களின் அதிருப்திக்குள்ளாகிய 1997 ஆம் ஆண்டின் திட்டத்திலுள்ள ஒரு சில அம்சங்களை மட்டும் எடுத்து -

இங்கே ஒரு வெட்டு, அங்கே ஒரு ஒட்டு; இதிலை ஒரு பூச்சு, அதிலே ஒரு மினுக்கு; என்ற வகையில் மாற்றி அமைக்கப்பட்டதுதான் புதிய திட்டம் என்பதை உணரும்போது -

தமிழ்த் தலைவர்கள் சிலரின் புதிய நிலைப்பாடு தமிழ் மக்களிடையே அச்சத்தையும் ஆத்திரத்தையும் அருவருப்பையும் ஏற்படுத்துகின்றதே!

திட்டத்தை ஆதரிக்கப் போவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துவிட்டது!

'இனப்பிரச்சினைக்கு இந்த அரசமைப்பு இறுதித் தீர்வல்ல என்பது தெளிவு. இதை ஒரு 'படி'யாக நாம் கருதுவதற்கு வாய்புண்டா என்பதைத் தான் நாம் பாக்கின்றோம்" எனப் பல 'படி' இறங்கிக் கதை பேசுகின்றார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம்!

'சும்மா இருந்த அம்மையாருக்கு அரைப்பணத்துத் தாலி போதாதா? எல்லாவற்றையும் ஒரேயடியாகப் பெற்றுக் கொள்ள முடியுமா? மெல்ல மெல்ல ஒவ்வொன்றாகத்தான் பெற்றுக் கொள்ளலாம்' என சிலர் தம் நிலைப்பாட்டை நியாயப்படுத்தக் கூடும்!

இவர்களுக்குச் சில உண்மைகள் தெரியவில்லைப்போலும்....

பேச்சுவார்த்தை, சத்தியாக்கிரகம் போன்ற சாத்வீக நடவடிக்கைகளின் விளைவாக முன்னர் எட்டப்பட்ட உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் எல்லாம் ஒருதலைப் பட்சமாக வெட்டிச் சிதைக்கப்பட்டன.

ஆயுதப் போராட்டத்தின் நிர்ப்பந்தத்தினால் செய்து கொள்ளப்பட்ட "இலங்கை இந்திய ஒப்பந்தம்" கூட அதன் அரைகுறைத் தன்மையாலும் சிலரின் அந்தரங்க சுத்தியின்மையாலும் தோல்வியைத் தழுவியது.

'இனியும் தாமதிக்க முடியாது. தீர்வு கண்டே ஆகவேண்டும்' என்ற உண்மையை இப்போது ஆட்சியாளருக்கும் அகில உலகினருக்கும் 'உறைக்க' வைப்பதற்கு ஆயுதப் போராட்டத்தை மேலும் பதின்மூன்று வருடம் தொடர வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டுவிட்டது!

[illegible]

இப்போது 'கொஞ்ச'த்தை ஏற்றுக்கொண்டால், 'மிச்சத்'தைப் பெறுவதற்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமோ? இனப்பிரச்சினைக்குப் பூரணமான தீர்வைக் காணக்கூடிய பொன்னான சந்தர்ப்பம் இது!

அத்தனை தமிழர்களும் ஒத்த கருத்துடன் உறுதியாக நிற்கின்றார்கள் என்றால் சிங்களப் பெரும்பான்மையும் சர்வதேச சமூகமும் நீதியைப் பற்றியும் நியாயத்தைப் பற்றியும் சிந்திக்காமல் விடா.

தென்னிலங்கையில் இப்போது கட்டியெழுப்பப்படும் எதிர்ப்புக்கள்கூட, தமிழர்களின் 'ஒற்றுமையின்மை' என்ற பலவீனத்தைப் பயன்படுத்தி, அவர்களை 'வெருட்டி'ப் பணியவைக்கும் ஓர் உத்தியாக இருக்கலாம்!

ஆகவே -

உண்மையை உணருங்கள்.
ஒற்றுமையாய் நில்லுங்கள்.
உண்மையை உணர்த்துங்கள்.

-சித்தன்.

# விலங்கு உலகத்தி



இரு வாரங்களின் பின் புலிமுகச் சிலந்தித் தாய்க்கு விடுதலை கிடைக்கும் நேரம். வெளியேறும் குஞ்சுகளை அவதானமாகப் பார்க்கின்றது.



அல்பற்றோஸ் குஞ்சு உணவு பெறுகின்றது. இடது புறமிருப்பது குஞ்சு. உணவு தேடும் விடயத்தில் இரு பெற்றோரும் விலங்கிடப்பட்டவை என்றே கொள்ளவேண்டும். குஞ்சின் அடங்காப் பசியைத் தீர்ப்பதற்கு ஓடியோடி உணவைத் தேடவேண்டியிருக்கும். மைல் கணக்கில் பறந்து அலைந்து உணவு தேடவேண்டியிருக்கும்.




'டிக் டிக்' (DIK - DIK) குடும்பம். ஆணும் பெண்ணும் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. பெண் சற்றே அசந்தாலும் ஆண் மாயமாக மறைந்துவிடுவார்.



பொதுவாகக் கடல் அங்கிகள் பெற்றோருக்குரிய கவனம் செலுத்துவதில்லை. படத்திலிருப்பது சிங்கறால் (LOBSTER) முட்டைகளும் (இடதுபுறம்), குடம்பியும் (வலதுபுறம்).



வலைப்பின்னல் நச்சு எறிபடை ஆண் தவளை (RETICULATED POISON DART FROG) முட்டைகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்றது. முட்டைகள் பின்னங் கால்களின் இடுக்கில் உள்ளன.



வாய் வளர்ப்பு (MOUTH BREEDING). சில இன மீன்கள் வாய் வளர்ப்பில் ஈடுபடும். இங்கு ஒரு சிக்கிளிட் (CICHLID) பெண்ணின் வாயில் இருந்து பல குஞ்சுகள் வெளியேறுவதைக் காணலாம்.

முட்டைகளை இட்டு, அவை கருக்கட்டல் அடைவதற்கு ஏற்ற வசதிகளைச் செய்து கொடுத்தாற் போதுமா? கருக்கட்டிய முட்டைகளுகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டாமா? இங்ஙனம் பாதுகாப்புக் கொடுப்பது பெற்றோருக்குரிய கவனம்(Parental care) எனப்படும்.

பெற்றோருக்குரிய கவனத்துக்கும், சூழலுக்கும் தொடர்புடையதாகத் தெரிகின்றது. பொதுவாக, நீர்வாழ்க்கைக்குரிய அங்கிகளில் பெற்றோருக்குரிய கவனம் இல்லை. இனம் அழியாமலிருப்பதற்காக அதிக எண்ணிக்கையில் முட்டைகளைத் தோற்றுவிக்கும். சிலவாவது தப்புமல்லவா? (கைவீச்சினால் நெல்லு விதைப்பதைப்போல - Broadcasting Method - சில பறவைகளுக்கு; சில ஏனைய விலங்குகளுக்கு, சில முளைக்காமல் போகும்; சில குற்றுயிராக இறக்கும்; ஆயினும் சிலவாவது முளைத்து வளரும்)

நிலவாழ்க்கைக்குரிய அங்கிகளில் பொதுவாக பெற்றோருக்குரிய கவனம் இருப்பதைக் காணலாம்.

கருக்கட்டல் முறைக்கும், பெற்றோருக்குரிய கவனத்திற்கும்,தொடர்பிருப்பதாகத் தெரிகின்றது. புறக்கருக்கட்டல் நிகழும் அங்கிகளில் பொதுவாக பெற்றோருக்குரிய கவனம் இல்லை; அகக்கருக்கட்டல் நிகழும் அங்கிகளில் பொதுவாக உண்டு. நீர்வாழ்க்கைக்குரிய அங்கிகளில் பொதுவாக புறக்கருக்கட்டலும், நிலவாழ்க்கைக்குரிய அங்கிகளில் அகக் கருக்கட்டலும் நிகழுவது குறிப்பிடத்தக்கது.

பெற்றோருக்குரிய கவனம், கூர்ப்பு இலக்கணத்துக்கு அமைய, படிமுறையாகவே ஏற்பட்டுள்ளது. தாழ்ந்த படியிலிருந்து மிக முன்னேற்றம் அடைந்த படிகளை இயற்கையில் காணலாம்.

சில அங்கிகள் முட்டைகளை மறைத்து வைப்பதன் மூலம் பாதுகாப்பைக் கொடுக்கும்(உதாரணமாக கரப்பான், பல்லி போன்றவை.)

சில, முட்டைகளைப் புதைத்து வைத்துப் பாதுகாப்புக் கொடுக்கும் (உதாரணமாக தத்து வெட்டியன், ஓணான், ஆமை போன்றவை

சில, காவலிருந்து முட்டைகளுக்குப் ப , காப்புக் கொடுக்கும் (உதாரணமாக சில இன மீன்கள், முதலை, மலைப்பாம்பு போன்றவை). சில, முட்டைகளைக் கொண்டுதிரிவதன் மூலம் பாதுகாப்புக் கொடுக்கும் (உதாரணமாக பொட்டுப் பூச்சி {சிலந்தி}, சில இனத் தவளைகள், சில இனத் தேரைகள் போன்றவை).

சில, முட்டைகளுக்கு மாத்திரமல்லாமல் பொரித்த குஞ்சுகளுக்கும் பாதுகாப்புக் கொடுக்கும்(உதாரணமாகப் பொட்டுப்பூச்சி, சில இன வண்டுகள், சில இனப் புலிமுகச் சிலந்திகள், சில இன மீன்கள் போன்றவை).

சில, இனங்கள் முட்டைகளை சூலகக் கான்களிலேயே தடுத்து வைத்து குட்டிகளை ஈனும். இது சூற்பிள்ளையீனும் தன்மை (Ovovivitary)எனப்படும். (உதாரணமாக கொடுக்கன், ஓபிட்டுக்கள், சில இனச் சுறா மீன்கள், பிடையன் பாம்புகள் போன்றவை).

சில, முடடைகளை அடைகாத்து குஞ்சு பொரித்ததும் அவை சுயாதீனமாகச் செல்லக் கூடிய காலம் வரை பாதுகாப்புக் கொடுத்தும் உணவு கொடுத்தும் வளர்க்கும் (உதாரணமாக பறவைகள், முட்டையிடும் பாலூட்டிகள்).

உச்சநிலைக்கவனம் கிடைப்பது குட்டியீனும் பாலூட்டிகளில்தான். இவற்றின் முளையம் கருப்பையிலிருந்து கொண்டு தாயிலிருந்து சூல்வித்தகம் வாயிலாகப் போஷாக்குப்



ஆபிரிக்கக் காட்டு நாய் (AFRICAN WILD DOG) தகப்பனும் குட்டியும். ஓரளவு சமிபாடடைந்த உணவைக் குட்டிக்குத் தர முயற்சிக்கின்றது. இந்நாயினால் பால் தர முடியாதல்லவா!

## இலிங்கத்தின் இய

பெற்று வளரும். ஈன்றபின் தாய் பால் கொடுத்து வளர்க்கும். இங்ஙனம் சிசு சுயாதீனமாக வாழும் காலம் வரை பெற்றோருக்குரிய பாதுகாப்பு கிடைக்கும்.

### பெற்றவளுக்குரிய பாரம்

கலிபோனிய கடற்சிங்கங்கள் (Californian Sea-Lion)கடற்கரையில் கூட்டம் சேர்ந்த இடத்தில் இனங்கலக்கும். இது பெரும்பாலும் துருவப்பிரதேசங்களில் அல்லது அண்டிய பிரதேசங்களில் நிகழும். பின்னர் அவை தெற்கு நோக்கிக் குடிபெயரும். இனக்கலப்பு நிகழ்ந்து ஓராண்டுக்குப் பின்னர் பெண்கள் தனித்தனியே பிரிந்து குட்டிகளை ஈனும். ஒரு பெண் ஒரு குட்டியை ஈனும். குட்டியைப் பெறுவது, வளர்ப்பது எல்லாம் பெண்ணின் வேலை. பிரிந்தபின், குட்டியைப் பெறும் வரை, குட்டியின் தகப்பனைத் தாய் காண்பதற்கு வாய்ப்பிருந்திருக்காது.

### தவிக்கவைக்கும் குஞ்சு

அலையும் அல்பற்றோஸ் (Wandering Albatross) பறவைகள் தென்துருவத்தில் இனவிருத்தி செய்யும். புற்களினால் கூடமைத்து அதில் பெண் முட்டையிடும். பெரும்பாலும் ஒரு முட்டை. பின் ஆணும் பெண்ணும் மாறி மாறி அடைகாக்கும். குஞ்சு பொரித்தபின் அதன் அகோரப் பசியை அடக்குவதற்கு ஆணும் பெண்ணும் மாறி மாறி இரைதேடிக் கொடுக்க வேண்டியிருக்கும்.

### கவனிப்பாரற்ற எச்சங்கள்

கடல்வாழ் அங்கிகள் பெரும்பாலும் கவனியாத பெற்றோர்கள் ஆகும். முட்டைகளை இட்டுவிட்டால் சரி; அவற்றின் கடமை முடிந்து விடும். முட்டைகளுக்கும் குஞ்சுகளுக்கும் சூழலும் சந்தர்ப்பமும்தான் பாதுகாப்புக் கொடுக்கும். இறால் இனம், நண்டினத்திலும் பெரும்பாலானவற்றின் கதை இதுதான். சில இறால், நண்டினங்கள் முட்டைகளை தமது வயிற்றுத்தூக்கங்களில் கொண்டு திரியும்.

### ஆண் பாதுகாவலர்கள்

கடற்குதிரைகளில் (Sea Horse)ஆண் மீனின் வயிற்றுப்புறத்தில் ஒரு மடி உண்டு. இந்த மடிக்குள் பெண் முட்டைகளை இட்டு வைக்கும். முட்டைகள் விருத்தியடைந்து, குஞ்சுகள் பொரித்து, சில காலம் குஞ்சுகளும் மடியில் பாதுகாப்பாக வளரும்.

### வாய் வளர்ப்பு(Mouth Breeding)

சில மீனினங்கள் தமது வாயில் முட்டைகளை வைத்திருந்து, அவை பொரித்தபின் குஞ்சுகளுக்கும் சில காலம் பாதுகாப்பான வாழ்விடத்தை அங்கு தரும். இக்காலகட்டத்தில் இவை உணவு கொள்வதில்லை; கொள்ள முடியாது. இங்ஙனம் வாய் வளர்ப்பில் ஈடுபடுபவை ஆண்கள். ஆயினும் சிக்லிட் (Cichlid)மீனினத்தில் பெண்கள் இத்தொழிலில் ஈடுபடும்.

### தவளைத் தகப்பன்கள்

மருத்துவச்சித் தேரை(Midwife Toad)யைப்போல, சில தவளைத் தகப்பன்மாரும் தமது பத்தினிகள் இட்ட முட்டைகளை தமது முதுகில் கொண்டு திரிந்து பாதுகாப்புக் கொடுக்கும் - முட்டைகள் பொரிக்கும் வரை. ஆண் கண்ணாடித் தவளை (Male Glass Frog)யையும், ஆண் வலையுரு நச்சு எறிபடைத் தவளை (Reticulated Poison Dart Frog)யையும் இதற்கு உதாரணங்களாகக் கொள்ளலாம்.

புலிமுகச்சிலந்திகளில் பெண் முட்டைக



கலிபோனியன் கடற்சிங்க (CALIFORNIAN SEALION) தாயும் சேயும். குட்டியைப் பராமரிப்பது தாயின் பொறுப்பு. கடந்த பருவ காலத்தில் குட்டியின் தகப்பனுடன் இனங்கலந்த பின் அதைச் சந்திக்கும் வாய்ப்பே தாய்க்குக் கிடைத்திருக்காது.



பெண்ணிடம் குட்டு வா
கவனிக்கின்றது. நீள
ANT - TAILED JAC
இப்படம் இலங்கையில்



கூட்டம் சேர்ந்துள்ள
RICAN WILDEBEES
நெருக்கம்!



கூட்டம் சேர்ந்து ப
(GANNET) பறவைக
சண்டைக்காரப் பே
காலத்தில் சண்டை
ஒன்றுகூடுகின்றன.



கொரில்லா குடும்பம்.
குட்டிகளைப் பேணி
குடும்பத்துக்குப் ப
தையின் கடன். (இ
பரம்பரைச் சொத்தாக



தந்தைப் பாசம். கடற்கு
ஆண்களின் வயிற்றுப் பு
கலவியைத் தொடர்ந்து
னுள் இட்டுவைக்கும். 
காலம் குஞ்சுகளுக்கும்
தந்தையின் பொறுப்பு.

# தில் பாலினப்போர்கள்

## இயற்கைச் சரிதம் - VI



குட்டு வாங்கிய ஆண், தன் குஞ்சைக் றது. நீள வால் ஜக்கானா (PHEAS- ILED JACANA) ஆணும் குஞ்சும். லங்கையில் எடுக்கப்பட்டது.




ந்துள்ள ஆபிரிக்க வில்ட்பீஸ்ற் (AF- LDEBEEST). அப்பாடா எவ்வளவு



ந்து பாதுகாப்புத் தேடும் கனெட் பறவைகள். இவை சாதாரணமாக ரப் பேர்வழிகள். விருத்திக்குரிய சண்டையை மறந்து ஒற்றுமையாக ன்றன.



டும்பம். குட்டிகளும் தாய்மாரும். பேணி வளர்ப்பது தாயின் கடன். தப் பாதுகாப்புக் கொடுப்பது தந் . (இந்த ஒழுங்குதான் நமக்கும் சாத்தாகக் கிடைத்துள்ளது).



. கடற்குதிரை(SEA HORSE)களில் பிற்றுப் புறத்தில் ஒரு பை உண்டு. டர்ந்து, பெண் முட்டைகளை இத க்கும். முட்டைகளுக்கும், பின் சில ளுக்கும் பாதுகாப்புக் கொடுப்பது றுப்பு.

ளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும். முட்டைகள் இடப்பட்டபின் அவை பொரிக்க இரு வார காலம் செல்லும். இக்காலகட்டத்தில் பெண் உணவு தேடிச்செல்லாமல், "கண் துஞ்சாமல்" முட்டைகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும். முட்டைகள் பொரித்துக் குஞ்சுகள் நகர்ந்து செல்ல ஆரம்பித்ததன் பின்னர்தான் தாய்க்கு விடுதலை கிடைக்கும் (மனித குலத்தில் தாய்ப்பாசம் உயிருள்ளவரை. தாயின், எச்சங்களின் கதை வேறு - நீடிக்கும்).

சாண உருளை வண்டு (Searab Beetles) கள் இனக்கலப்பின் பின் முட்டைகளை இட்டு, ஆணும் பெண்ணும் சேர்ந்து முட்டைகளைச் சூழ சாணத்தைச் சேர்த்து உருட்டி எங்காவது புதைத்து வைக்கும். இங்ஙனம் உருட்டப்பட்ட சாணம் குடம்பிகளுக்கு உணவாகவும் பயன்படும். கால்நடைகள் உள்ள இடங்களில் இந்த வண்டு தமது கருமங்களில் ஈடுபட்டிருப்பதை நீங்கள் கண்டிருக்கலாம்; அல்லது நன்றாக உருட்டப்பட்ட மேசைப்பந்தின் அளவிலான சாண உருளைகளை நீங்கள் கண்டிருக்கலாம்.

### பறவைகளின் பலதரப்பட்ட ஒழுங்கு

முட்டைக்கும் குஞ்சுகளுக்கும் பாதுகாப்புக் கொடுப்பது பெண்களின் தொழிலாக இருக்கலாம்; அல்லது ஆண்களின் தொழிலாக இருக்கலாம் (அப்பாவி அப்பாமார்கள்); அல்லது இரண்டினதும் தொழிலாக இருக்கலாம். நீளவால் ஜக்கானாவில் (Pheasant Tailed Jacana)ஆண் பெண்களிடம் குட்டு வாங்கும் பேர்வழி(Hen Pecked). குஞ்சுக்குப் பாதுகாப்பு கொடுப்பது இவரின் பொறுப்பு.

**அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்**

**- குகன் -**

ஆணும் பெண்ணும் சேர்ந்து அடைகாத்து, குஞ்சுகளுக்கு உணவு கொடுத்து, பாதுகாப்பதற்கு பல உதாரணங்களைத் தரலாம். ஆனாலும் இவற்றிலும் ஏமாற்றுப் பேர்வழிகள் உண்டு. ஆண் புள்ளியுள்ள பூச்சி பிடிப்பான் (Male Pied Fly Catcher)ஒரு பலதாரவிரும்பி. பெரும்பாலும் இரண்டு பெண்களை ஏமாற்றி பெரிய வீடு, சின்ன வீடு என்று அமைத்து விடும்; ஆயினும் ஒன்றுதான் அதன் கரிசனத்தைத் தொடர்ந்து ஈர்க்கும் (எது என்பது நம்ம சின்னவீட்டுக்காரருக்குத்தான் வெளிச்சம்).

ஊசல் அடைக்கலாங்குருவிகள் (Penduline Tits)தூக்கணாங்குருவிகளின் (Weaver Bird) கூட்டைப்போல - ஆனால் சிறிய அளவில் - கூடமைக்கும். அடைகாத்தல், இரைதேடலில் இரண்டும் பங்கு கொள்ளும். ஆயினும் ஆண், கூட்டின் வாசலுக்கு வந்ததும் பெண் வெளியேற வேண்டும். சற்றே தாமதம் ஏற்பட்டாலும் அவர் எங்காவது யாரையாவது தேடிப் போய் விடுவார்; சோடியைப் பிரியும் நிர்ப்பந்தம் பெண்ணுக்கு ஏற்படும். (ஆண்களிற்றான் எத்தனை தினுசுகள்?)

வின்ச்(Bull Finch) பறவைகளை மகிழ்ச்சியான, நிம்மதியான, குடும்பத்திற்கு உதாரணமாகக் கொள்ளலாம். "புருஷன் - பெண்சாதி" இருவரும் சகல கருமங்களிலும் சமமாகப்பங்கு கொள்வார்கள்.

தாயன்பின் உச்சப் பரிணாமத்தை பாலூட்டிகளில்தான் காணலாம். பெரும்பாலும் புணர்ச்சியுடன் ஆணின் கடமை முடிந்துவிடும். முளையத்தைச் சுமந்து, ஈன்று, பால் கொடுத்து வளர்த்து, குட்டி சுயாதீனமாகச் செல்லும் வரை பேணிப் பாதுகாப்பது தாயின் கடமை. ("பத்து மாதம் சுமந்து பெற்றேனே! என்ன பயன்?" என்று எங்கோ, யாரோ புலம்புவது காதில் விழுகின்றது.)

சில இனங்களுக்குரிய பாலூட்டிகள் வாழ்நாள் முழுதும் சோடி சேர்ந்து வாழ்வதுண்டு. ஆயினும் பெண் ஆணின் மேல் எப்பொழுதும் ஒரு கண் வைத்திருக்காவிட்டால், அவர் எங்காவது "தொலைந்து" போய்விடுவார்.

ஆபிரிக்கக் காட்டுநாய்களில் (African Wild Dog) ஆணும் குட்டிகளுக்கு உணவு தேடிக் கொடுப்பதில் பங்கு கொள்ளும்.

எமது அண்மித்த உறவினர்களாகிய கொரிலாக்கள் (Gorilla) கூட்டுக்குடும்பமாக வாழும் இயல்புடையன. நம் குழந்தைகளைப் போல, ஆறுதலாக வளர்ந்து முதிரும் கொரிலாக் குழந்தைகளைப் பேணிப்பாதுகாக்க வேண்டியது தாயின் செயல். அதனால் தாய் - சேய் உறவு மனிதரைப்போல மிகவும் நெருக்கமாக இருக்கும். போர் வீர தகப்பனின் (Warrior Father)கடமை குடும்பத்திற்குப் பாதுகாப்புக் கொடுத்தல்.

மரநாயைப் போன்ற, மீர்காற்ஸ்(Meer kats)எப்பொழுதும் கூட்டமாகத் திரியும். எப்பொழுதும் விழிப்பாயிருக்கும். ஆபத்து நெருங்கினால் சத்தமிட்டு கூட்டத்துக்குச் செய்தியைத் தெரிவித்து விட்டு, சகலதும் ஓடிஒழிந்து கொள்ளும்.

சில இன அங்கிகள் கூட்டமாக, நெருக்கமாக, இருப்பதன் மூலம் எச்சங்களுக்குப் பாதுகாப்புத் தேடும். பென்குயின் (Penguin), கனெற்ஸ் (Gannets)பறவைகளை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். கானற்ஸ் பறவைகள் சாதரணமாகச் சண்டையிடும் பேர்வழிகள். ஆயினும் இனவிருத்திக்குரிய காலங்களில் தோளோடு தோள் முட்டும் வகையில் நெருக்கமாகவிருக்கும். கூட்டத்திலிருந்து வெளியே அலையும் குஞ்சுகளுக்கு பலதரப்பட்ட ஆபத்தக்கள் காத்திருக்கும்.

தாவர உண்ணிகளாகிய பாலூட்டிகளும் கூட்டமாக வாழுமியல்புடையவை. உதாரணமாக "னு" (Gnu) அல்லது "வில்ட் பீஸ்ற்" (Wildebeest)என்ற ஆபிரிக்க விலங்கு அதிக எண்ணிக்கையில் உள்ள கூட்டங்களாக வாழும். கூட்டத்தினிடையே இருக்கும் போது குட்டிகளுக்குப்பாதுபாப்பு; பிரிந்தால் ஆபத்து நேரிடும். பல கோடிக்கண்கள் இவற்றைப் பார்த்துக்கொண்டு நாக்கைச் சப்புக்கொட்டிக் கொண்டிருக்கும். மேலும், குட்டி தாயிலிருந்து பிரிந்தால், வேறு எந்தத் தாயிடமும் பால்பருக முடியாது; முகர்ந்து பார்த்துத் தாய் தள்ளி விடும். அதனால் மேய்ப்பழகாத குட்டிகள் எதிரிகளிடம் அகப்படாவிட்டாலும் உணவின்றி மடிய நேரிடும் (இந்தப் பிரச்சினை யானைக் குட்டிகளுக்கு இல்லை; அவை எந்தத் தாயிடமும் பால் பருக முடியும்).




கபடதாரி புள்ளிப் பூச்சிபிடிச்சான் (PIED FLY CATCHER) ஆணும் (இடதுபுறம்) பெண்ணும். இவர் இரு பெண்டாட்டிக்காரர். ஆயினும் ஒரு பெண்டாட்டி மேல்தான் கூடிய கரிசனை காட்டுவார்.



தாய் அன்புக்கு இலக்கணம். பாலூட்டித் தாயும் பாலருந்தும் குட்டியும்.




அமைதியான, மகிழ்ச்சியான புல்வின்ச் (BULL-FINCH) குடும்பம். ஆணும் (இடதுபுறம்) பெண்ணும் குஞ்சுகளும்.




சாணி உருளை வண்டுகள் (SCARAB BEET-LES). முட்டைகளுக்குப் பாதுகாப்பையும் குடம்பிகளுக்கு உணவையும் சாணித்திரள் கொடுக்கும். திரளையை உருட்டித் தொகுப்பதில் ஆண், பெண் இரண்டும் தொழிற்படுகின்றன.



ஊசல் அடைக்கலாங் குருவிகள் (PENDULINE-TITS). ஆணும் (வெளியே) பெண்ணும் (கூட்டில் இருந்து எட்டிப் பார்ப்பது). பெண் உடனடியாக வரவேற்காவிட்டால் அவர் எங்காவது போய்விடுவார்.



ஒரு கண்ணாடித் தவளைத் (GLASS FROG) தந்தை தன் மனைவியின் முட்டைகளுக்கு பாதுகாப்புக் கொடுக்கிறது. மனைவியின் எங்கு அலைந்து போனாளோ?



17. மீர்காற்ஸ் (MEERKATS) குடும்பம். பெற்றோரும் குட்டிகளும். ஏதோ சலசலப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். இரண்டு காலில் நின்று சூழலை ஆராய்கின்றன. பாய்ந்து சென்று மறைவதற்குத் தயாராக.

# சோடா மூடி


எம்மிடம் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட சோடா மூடி கையிருப்பில் உள்ளது. தேவைப்படு வோர் உடன் தொடர்புகொள்ளவும். கொள்வன வுத் தொகைக்கு ஏற்ப விசேட கழிவு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- *சிவா நறுமணப் பூங்கா,*
*288, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தொலைபேசி இல: 2567

(77022)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1972 - 01 - 10

மறைவு 1999 - 07 - 19

அமரர்

## கந்தசாமி விவேகானந்தன்

திதி: 06 – 08 – 2000

மண்ணதனை விட்டேகி
வருடம் ஒன்றாகிடினும்
எம் எண்ணமதில் உம் நினைவு
என்றென்றும் நீங்காது!

அன்பகலா நினைவுடன்
**குடும்பத்தினர்.**

*குருநாதர் ஸ்ரோர்ஸ்,*
*உடுப்பிட்டி.*

(77032)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அன்னையின் மடியில் 14 - 01 - 1937

ஆண்டவன் அடியில் 07 - 07 - 2000

அமரர்

## வல்லி சின்னத்தம்பி

**அன்பின் அப்பாவே!**
**பாரினில் உறவுகள் காத்திருக்க - உம்**
**பாசத்துக்காய் நாமெல்லாம் தவமிருக்க**
**டாக்டர்களே உமைச் சூழ்ந்திருக்க - நீர்**
**எம்மைப் பாதிவழியில் விட்டுப் போனதென்ன?**

**ஆறுதல் இல்லையப்பா எமக்கு - பாரினில்**
**அன்பு வார்த்தையும் இல்லையப்பா**
**நீங்கள் தினமும் அன்பாக அழைத்திடுவது - இன்றும்**
**காதில் கேட்குதப்பா!**

**பொறுக்கவில்லை விட்டுவைக்க - காலனவன்**
**கவர்ந்துவிட்டான் பாரைவிட்டே**
**மீண்டும் எம்முடன் பிறந்திடவே - நல்லூர்க்**
**கந்தனின் காலடியிலே**
**கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி - தங்கள்**
**ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (06-08-2000) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடை பெறும ஆத்மசாந்திக கிரியைகளிலும் அதனைத தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

*ஞானசம்பந்தர் வீதி,*
*உரும்பிராய் வடக்கு.*

(76926)

## விவரம் பதியுமாறு கோரிக்கை

தென்மராட்சி,ஓக.6

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக கடமையாற்றியவர்கள் தமது பெயர் விவரங்களை நாளை திங்கட்கிழமை நெல்லியடியில் இயங்கும் தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (இ-117)

## பிரதிகளைச் சமர்ப்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.6

ஆசிரியர் பதவி உயர்வு தொடர்பாக மாகாணக் கல்வி அமைச்சுக்கு விண்ணப்பித்த சகல ஆசிரியர்களையும் கீழ்வரும் ஆவணங்களின் பிரதிகளை தம்மிடம் விரைவாகச் சமர்ப்பிக்குமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களின் விவரம் வருமாறு:-

நியமனக்கடிதப்பிரதி,கடமையேற்ற கடிதப்பிரதி, ஆசிரிய பயிற்சிச்சான்றிதழ், பட்டதாரிச்சான்றிதழ், டிப்ளோமாச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், பெயர்மாற்றக்கடிதம்.

பெயர் மாற்றக்கடிதம். இல்லாது விட்டால் திருமணச்சான்றிதழ் (மூலப்பிரதி) சமர்ப்பிக்க முடியும் என்றும், பதவி உயர்வு வகுப்பு 1க்குச் செல்பவர்கள் மட்டுமே பிறப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## பயண ஒழுங்கு

யாழ்ப்பாணம்,ஓக.6

யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த கலைப்பீட முதலாம் வருட மாணவர்கள் தமது பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக பெயர் விவரங்களை நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்குக் கலைப்பீட மாணவர் ஒன்றிய அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-10)

## சுன்னாகத்தில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஓக.6

யாழ். மாவட்ட வர்த்தக தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சுன்னாகக் கிளையில் கடந்த 27 ஆம் திகதி நள்ளிரவு கூரை பிரிக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

சுன்னாகம் வர்த்தக சங்கத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இரவில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த போதே இக் களவு இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. (க)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.6

வடக்குகிழக்கு மாகாண எழுதுனர் மற்றும் அதனோடு இணைந்த சேவைகளுக்கு 1998 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு இதுவரை நியமனம் கிடைக்காதவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஆரியகுளம் டி.எம்.ஐ. கல்வி நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் இதில் கலந்து கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க3)

## சுட்டெண் வழங்கல்

யாழ்ப்பாணம்,ஓக.6

மட்டுவில்தெற்கு அமெரிக்க மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையில் இருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டை (சுட்டெண்) நாளை திங்கட்கிழமை மருதனார்மடம் கல்விக் கோட்டத்தில் வழங்கப்படவுள்ளதாக மேற்படி பாடசாலையின் அதிபர் எஸ். மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

எனவே பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை அன்றைய தினம் சமுகமளிக்கும்படி கோரப்பட்டுள்ளது.

மாணவர்களின் பெற்றோர்களையும் வகுப்பாசிரியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (இ-31)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 1979 - 01 - 24

மண்ணின் மடியில் 1996 - 07 - 22

## செல்வன் வேலுப்பிள்ளை தயாநிதி

(நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவன்)

தம்பி! உன் நினைவுகள் ஓர் ஓடையாக
கனவிலும் சலசலத்து ஓடுகின்றன!
அதன் கரைகளில் துடித்துப் படிந்த
துயரங்களை ஆற்ற நீ வருவாயா?
எம் நெஞ்சிருக்கும் வரை உன் நினைவிருக்கும்.
உன் ஆத்மா சாந்தியடைய எம் கண்ணீர்ப்பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.

உன்பிரிவால் துயருறும்
**அன்பு அப்பா, அம்மா, அக்காமார்.**

*கரணவாய்மத்தி,*
*கரவெட்டி.*

(77050)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 1938 - 12 - 07

மறைவு 2000 - 07 - 22

## அமரா கந்தையா கண்ணுத்துரை

(இளைப்பாறிய DI - பருத்தித்துறை சாலை)


எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட அமரர் கந்தையா கண்ணுத்துரை அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், மதிய போசன நிகழ்வும் எமது தற்காலிக இல்லத்தில் நாளை (07-08-2000) திங்கட்கிழமை நடைபெறும். அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவினால் துயருறும்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

தற்காலிக முகவரி:
*அளவெட்டி தெற்கு, அளவெட்டி.*

(76999)

# நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



1930 – 02 – 21

2000 – 06 – 30

அமரர்

## சின்னையா நடராசா

(P.W.D. ஓவசியர்)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட அமரர் சின்னையா நடராசா அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் ஆறுதல் கூறி எங்கள் துயரத்தில் பங்கு கொண்டோருக்கும் பூமாலைகள் சாத்தி, அஞ்சலி செய்தோருக்கும் மற்றும் அதிபர், ஆசிரியர்கள், C.T.B உத்தியோகத்தர்களுக்கும் உற்றார், உறவினர் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிப்பதுடன்

இன்று (06-08-2000) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சி. சண்முகராசா,**
**சி. நவரத்தினராசா,**
**சி. கெங்காமலர்தேவ** (அதிபர்)
(சகோதரர்கள்)

*பிரதேச செயலக வீதி,*
*உடுவில் வடக்கு,*
*சுன்னாகம்.*

(76939)

## சுட்டெண் வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக. 6

கச்சாய் அ. த. க. பாடசாலையிலிருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் இதுவரை சுட்டெண்களைப் பெற்றுக்கொள்ளாதவர்களை எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் க. மங்களேஸ்வரன் கேட்டுள்ளார். (க)

★ ★ ★

பளை மத்திய கல்லூரியில் இருந்து 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு நாளை திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்திலும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9. 30 மணிதொடக்கம் 11மணிவரை மருதனார்மடத்தில் உள்ள கல்விவலயத்திலும் சுட்டெண்கள் வழங்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் கே. குணபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த மாணவர்களுக்கான பரீட்சை நிலையம் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ளதால் மாணவர்கள் அங்கு பரீட்சைக்குத் தோற்ற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-10)

## அனுமதி அட்டை பெறக் கோரிக்கை

தென்மராட்சி, ஒக. 6

எதிர்வரும் பதின்மூன்றாந் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கான பின்வரும் பாடசாலைகளின் அனுமதி அட்டைகள் தென்மராட்சி வலய கல்வி அலுவலகத்தில் உள்ளதாகவும், இவற்றினை அந்தந்தப் பாடசாலை அதிபர்கள் வந்து பெற்றுக் கொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

கைதடி கலைவாணி வித்தியாலயம் மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, எருதிடல் அ. த. க. பாடசாலை, இயற்றாலை அ.த.க. பாடசாலை, நுணாவில் மேற்கு அ. த. க. பாடசாலை ஆகிய பாடசாலைகளின் அனுமதி அட்டைகளே வலயக் கல்வி அலுவலகத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [இ-117

## புலமைப்பரிசில் பரீட்சை நிலையம்

யாழ்ப்பாணம், ஒக. 6

இம்மாதம் 13 ஆம் திகதி நடைபெறவுள்ள 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேச வித்தியாலய மாணவர்களுக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் மேற்படி பரீட்சை நடைபெறும் என்று அதிபர் சோ. ஸ்ரீகாந்தன் தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான சுட்டெண்கள் பரீட்சை நடைபெறும் நாளன்று வழங்கப்படவுள்ளதால் அன்றைய தினம் காலை 9 மணிக்கு அனைவரையும் சமுகமளிக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

## சுந்தரர் குருபூசை

யாழ்ப்பாணம, ஒக. 6

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் சுந்தரர் குருபூசை இன்று ஞாயிறுக்கிழமை இடம் பெறும்.

முற்பகல் 10 மணிக்கு நல்லூர் சட்டநாதர் ஆலயத்திலும் நண்பகல் 12 மணிக்கு திருநெல்வேலி கிழக்கு ஸ்ரீ வெள்ளைப்பிள்ளையார் ஆலயத்திலும் குருபூசை நடைபெறும்.

★ ★ ★

சுழிபுரம் அறுபத்து மூவர் குருபூசை மடாலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை புராணபடனம் பூசை வழிபாடு என்பவற்றுடன் இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிமுதல் நடைபெறவுள்ளது.

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் தலைமையில் இந்த விழா நடைபெறும்.

★ ★ ★

பண்ணாகம் இந்துசமய விருத்திச் சங்கத்தினரால் பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயிலிலும் சுந்தரர் குருபூசை இன்று பிற்பகல் சுந்தரர் திருமுறைகள் பண்ணோடு ஓதப்பட்டு கூட்டு வழிபாட்டுடன் நடைபெறவுள்ளன.

வழக்கம்பரை அம்பாள் ஆலயத்திலும் இன்று நண்பகல் புராணபடனம், சுந்தர் தேவாரம் ஓதுதல், பூசைவழிபாடுகள், குருபூசை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.


## தேவை

- தும்பில் கயிறு திரிப்பதில் நல்ல அனுபவம் உள்ளவரும்,
- சேலையில் 'பிறின்ரிங்' செய்வதில் தேர்ச்சி பெற்றவரும்,
- கைத்தறி நெசவில் நல்ல அனுபவம் பெற்றவரும் உடன் தேவை.

நேரில் வந்து சந்திக்கவும்.
சனி, ஞாயிறு தினங்களில் காலை 9–12 மணி வரை.

**லாலா சோப் தொழிலகம்,**
அச்சுவேலி.

(சி/12405)

## 750 மில்லி லீற்றர் வெற்றுப் போத்தல் தேவை

எமக்கு கூடிய தொகையான
750 மில்லி லீற்றர் (மென்டிஸ்)
வெற்றுப் போத்தல்கள் தேவைப்படுகின்றன.
வைத்திருப்பவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு எமக்கு வழங்கலாம்.
நியாயமான விலைக்கு கொள்வனவு செய்யப்படும்.

பொது முகாமையாளர்
வலிகாமம்
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி.
பிப்பிலிச் சந்தி,
மானிப்பாய். (சி/12406)


# பத்திரிகையாளனாக 50 வருடங்கள்; ஓயாது எழுதும் ஆசிரியர் கோபு

ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைத்துறை வரலாற்றில் பல இளம் பத்திரிகையாளர்களை உருவாக்கித் தனக்கென ஒரு முத்திரை பதித்தவர் எஸ். எம். ஜி என்றும் கோபு என்றும் அன்போடு அழைக்கப்படும் எஸ். எம். கோபாலரத்தினம்.

கோபு 23 வயது இளைஞனாக வீரகேசரி பத்திரிகையில் தன் தொழிலை ஆரம்பித்தவர். பத்திரிகைத் துறையில் இணைந்து கொள்பவர்களில் இருசாரார் உண்டு. அத்துறையில் இருக்கும் ஆர்வம் காரணமாக சேர்ந்து கொள்பவர்களும் உண்டு. வேலை ஒன்று தேவை என்ற காரணத்தால் இத்துறையில் இணைந்து கொள்பவர்களும் உண்டு. இதில் முதல் வகையைச் சேர்ந்தவரே கோபு. பத்திரிகை எழுத்துத்துறையில் சிறுவயதிலிருந்தே ஆர்வம் கொண்ட அவர் கடந்த அரை நூற்றாண்டு காலம் இத்துறையில் தன்னை முற்றாக அர்ப்பணித்திருக்கிறார்.

யாழ்ப்பாணம் ''ஈழநாடு'' பத்திரிகை என்றால் அதை அறியாதவர்கள் இல்லை எனலாம். அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியராக 20 வருடங்களுக்கு மேலாக பணியாற்றிய எஸ். எம். கோபாலரத்தினம் ஈழமக்களிடையே மதிப்புமிக்க பத்திரிகையாளன்.

இன்று இலங்கையிலும் கடல் கடந்த நாடுகளிலிருந்து வெளிவரும் தமிழ் ஊடகங்களிலும் பணியாற்றும் பலர் கோபுவிடம் பயிற்சிபெற்றவர்களே.

எஸ். எம். ஜி என்ற பெயரில் அரசியல் கட்டுரைகள், ஸ்ரீரங்கன் என்ற பெயரில் சிறுகதைகள், கோபு என்ற பெயரில் கட்டுரைகள், ஊர் சுற்றி என்ற பெயரில் சிந்தனைக் கட்டுரைகள் எழுதியவர் அவர்.

எஸ். எம். ஜீ. யின் பத்திரிகை வாழ்க்கை கடந்த1959ம் ஆண்டு ஆரம்பமானது வீரகேசரியில் படி திருத்துனராக (Proof Reader) நுழைந்த இவர் சிறிது காலத்தில் ஆசிரிய பீடத்தில் உதவி ஆசிரியராக பதவி உயர்வு பெற்றார் பின்னார் 1960 ஆம் ஆண்டு நடைபெற்ற வேலை நிறுத்தத்தினால் வீரகேசரியை விட்டு வெளியேறி யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையின் செய்தி ஆசிரியராக இணைந்து கொண்டார் யாழ்ப்பாணத்தில் இருந்து நான்கு தினசரிகள் வெளிவந்தன என்றால் அதன் முன்னோடியாகத் திகழ்ந்தவர் எஸ் எம் ஜி தான் கொழும்பிலிருந்து தேசிய நாளிதழ்கள் வெளிவரும் நிலையில் கொழும்புக்கு வெளியே இருந்து கொண்டு மக்கள் அபிமானத்தை பெறும் அளவிற்கு பிராந்திய தினசரியை வெற்றிகரமாக இலாபகரமாக வெளிக்கொணரமுடியும் என 'ஈழநாடு, பத்திரிகை மூலம் நிரூபித்துக் காட்டியவர் அவர்.

1959 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஈழநாடு வாரப் பத்திரிகையாக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரத்

(கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் இவ்வாண்டுக்கான விருது வழங்கும் விழா இன்று (ஞாயிறு 6 - 8 – 2000) மட்டக்களப்பு பி. ஐ. ஆர். ஆர். பி மண்டபத்தில் நடைபெறுகிறது, இவ்வாண்டிற்கான அமரர் எஸ். டி சிவநாயகம் நினைவு விருதினை இலங்கையின் தமிழ்ப் பத்திரிகைத் துறையின் மூத்த பத்திரிகையாளரான எஸ். எம கோபாலரத்தினம் பெறுகிறார், அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது).

தொடங்கியது. தினசரியாக வெளிக்கொணரும் நோக்குடன் அமரர் கே. சி. தங்கராசா அவர்களால் நிறுவப்பட்ட ஈழநாடு கோபுவை செய்திஆசிரியராகக்கொண்டு 1961 ஆம் ஆண்டு பெப்ரவரியிலிருந்து தினசரியாகியது 1961ல்நடைபெற்றசத்தியாக்கிரகப்போராட்டம் ஈழநாடு இதழை யாழ் குடாநாட்டு மக்களிடையே பிரபல்யம் பெறச் செய்தது.

சத்தியாக்கிரகம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதால் உடனுக்குடனான செய்திகளான சிறப்புப் பதிப்புக்களாய் (Special Edition) வெளியிட்டு மக்கள் மதியில் செல்வாக்குப் பெற்றது. யாழ்ப்பாணம் கச்சேரியில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர்கள் யாழ்ப்பாணம் பஸ் நிலையம் வரும்போது கச்சேரியில்

**இரா. துரைரத்தினம்**

என்ன நடந்தது என்பதை ஈழநாடு எழுதியிருக்கும். அதை வியப்புடன் வாங்கிப் படிப்பார்கள். இதனை கோபு இன்றும் நினைவு கூர்வார்.

### ஈழநாட்டில் 20 வருடங்கள்

அக்கால கட்டத்தில் ஈழநாடு தான் கோபு, கோபு தான ஈழநாடு எனும் அளவிற்கு மக்கள் மனங்களில் அவர் எழுத்துக்கள் பதிந்திருந்தன. ஈழநாடு பத்திரிகையின்20ஆவதுஆண்டுநிறைவை முன்னிட்டு கோபு எழுதிய ''நீங்கள் உறங்கும் போது நாங்கள் விழித்திருக்கிறோம்'' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரைத்தொடர் வாசகர் மத்தியில் பிரபல்யம் பெற்றது

வாசகர்களுக்கு விடிந்ததும் செய்திகளை முழுமையாக வழங்க வேண்டும் என்பதற்காக இரவு இரவாக விழித்திருந்து செய்திகளைத் திரட்டி வழங்கும் பணியின் முக்கியத்துவம் பற்றியும் சுவையான, சோகமான சம்பவங்கள் பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து உடல்நலக் குறைவு காரணமாக 1981 இல் ஈழநாடு பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஆனாலும் அவரால் பத்திரிகைத் துறையை விட்டுப் பிரியமுடியவில்லை.

1982 இல் ''காலைக்கதிர்'' வாரஇதழ் ஆசிரியராக மீண்டும் இணைந்துகொண்டார். ஆறுமாதங்களுக்கு மேல் தொடரமுடியாத நிலையில் பொருளாதாரச் சுமையால் இதழ் நிறுத்தப்பட்டது. அதன் பின்னர் 1985 ஆம் ஆண்டு சாய்பாபா அட்வடைசிங் சார்பில் வெளிவந்த செய்திக்கதிர் பத்திரிகையின் ஆசிரியரானார். ஈழத்தில் புதிய முறையில் வெளிவந்த சஞ்சிகை என இதனைக் கூறலாம். இக் காலகட்டத்தில்தான் ''ஈழமுரசு'' பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். இவரது பத்திரிகைப் பணியில் இக் காலகட்டமே மிகச்சவாலாக அமைந்தது

### சிறைவாசம்

1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10 ஆம் திகதி இந்திய அமைதிப்படையினரால் ''ஈழமுரசு'' பத்திரிகை அச்சகம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது. ஆனாலும் ஈழமுரசு பத்திரிகையை விடா முயற்சியாகக் கொண்டு வந்தவர் கோபு அவர்களே. இது ஒரு சாதனை முயற்சி என்று குறிப்பிடலாம். அதனைத் தொடர்ந்து 1987 நவம்பர் 25ஆம் திகதி இந்திய அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தார். இக் காலத்தில் சிறைவாசத்தின் துன்பங்களை, அனுபவங்களை ''ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை'' என்னும் தலைப்பில் எழுதினார்.

இதனைத் தமிழகத்தில் இருந்து வெளிவரும் ஜூனியர் விகடனும் பிரானஸ், லண்டன், ஜேர்மனி, சுவிஸ்லாந்து, கனடா ஆகிய ஐந்து நாடுகளிலிருந்து வெளிவரும் ''ஈழநாடு'' பத்திரிகையிலும் ஆறுமாதகாலமாகத் தொடராக வெளிவந்து உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் அபிமானத்தைப் பெற்றது.

'ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை' நூலுருவில் இன்று கிழக்கிலங்கை செய்தியாளர் நடத்தும் விழாவில் வெளியிடப்படுகிறது,

இவ்வாறான கனிந்த பத்திரிகையாளனின் பேனா முனை இன்னும் ஓயவில்லை. ஆணித்தரமான ஆசிரிய தலையங்கங்கள், அரசியல் கட்டுரைகள் அச்சமின்றி செய்திகளை வெளியிடும் துணிவு ஆகிய குணநெறிகளால் துணிச்சலான பத்திரிகையாளன் என பத்திரிகை உலகின் முத்திரை குத்தப்பட்டதுடன் அவரது பணியும் தொடர்கிறது. வடக்கில் பிராந்தியபத்திரிகை ஒன்றின் ஆசிரியராக இருந்து அதன் வெற்றிக்காக உழைத்த கோபு அவர்கள் கிழக்கின் முதல் தினசரியின் பிரதம ஆசிரியர் என்ற பெருமையையும் பெறுகிறார்.

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் இந்த ஆண்டில் இருந்து வருடாந்தம் தமிழ் பத்திரிகைத் துறைக்குப் பணியாற்றிய ஒருவருக்கு விருது வழங்கிக் கௌரவிப்பது என்ற திட்டத்திற்கு அமைய முதலாவது விருதினைப் பெறும் கௌரவத்தைக் கோபு அவர்கள் பெறுகிறார்கள். கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் வழங்கும் இந்த விருது ஒவ்வொரு வருடமும் ஒவ்வொருவரின் நினைவாக வழங்கப்படவிருக்கிறது. இந்த வருடம் அமரர் எஸ் டி. சிவநாயகம் நினைவாக வழங்கபபடுகிறது. ★

## மாணவர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 6

மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்தில் 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலோ அல்லது மறுநாள் புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு மருதனார்மடம் கல்வி வலயத்திலோ தம்மைச் சந்திக்குமாறு அதிபர் வே. விநாயகமூர்த்தி கேட்டுள்ளார். (க-10)

## மூளாய் சேர்ச் வீதி திருத்தப்படுகிறது

மூளாய் சேர்ச் வீதியைத் திருத்தும் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திருத்தப் பணிகள் வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவரும் வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ. பி. டி. பி. பொறுப்பாளருமான என். திரிலோகநாதனின் பணிப்பின் பேரில் நடைபெறவுள்ளது. (இ-4)

## சுகாதாரப் பணி

காரைநகர், ஒக. 6

தீவகத்தின் சுகாதார வசதிகளை மேம்படுத்துமுகமாக சர்வதேச கெயர் நிறுவனம் முதற்கட்டமாக தீவுபகுதியில் 100 தற்காலிக மலசல கூடங்களை அமைக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றது. (ஜ-73)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்குண்டு

நல்லின DASHOUND டாஸ் சோன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு தொடர்பு: 70, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (பேக்கரிக்கு முன்னால்)

(சி/12393)

## தவறிவிட்டது

கரவெட்டி துன்னாலை மத்தியைச் சேர்ந்த நடராஜ ஐயா நாகேஸ்வர சர்மாவின் தேசிய, விசேட அடையாள அட்டைகள், வடமராட்சி பாஸ் என்பன நீர்வேலிக்கும் உரும்பிராய்க்கும் இடையில் 3 ஆம் திகதி தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.

(77052)

பற்குணசிங்கம் றஜீந்திரன் என்பவருடைய விசேட அ. அட்டை (இல.0903013346), தேசிய அடையாள அட்டை (இல. 751854358 V) என்பன சட்டநாதர் தேர் திருவிழாவின் போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 448, இராமலிங்கம் றோட், நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைக்கும் படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

(77056)

## மணமகன் தேவை

இந்து உயர்கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 71 இல் பிறந்த அனுஷ நட்சத்திரம் 4 இல் செவ்வாயுள்ள அழகான பட்டதாரிப் பெண்ணுக்கு அரசாங்க உத்தியோகத்திலுள்ள மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு கொள்ள வேண்டியவர்: சி. சிவசாமி, 37/02, சிவகுருநாதர் வீதி, யாழ்ப்பாணம்.

(76904)

அரச அலுவலகமொன்றில் எழுதுவினைஞராகப் பணிபுரியும் 32 வயது கத்தோலிக்க உயர்குல மணமகளுக்குத் தகுந்த மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். சகல விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விள. இல. 1072, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(77040)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1962 ஆம் ஆண்டு பிறந்த கிளிநொச்சியில் ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றும் அச்சுவினி நட்சத்திரம் உதயத்தில் செவ்வாய்க் குற்றமுடைய பட்டதாரி மணமகனுக்கு தகுதி கொண்ட உத்தியோகமுடைய கிளிநொச்சியில் சென்று வசிக்கக் கூடிய மணமகள் எதிர்பார்க்கப்படுகின்றது உடன் தகுந்த விவரங்களும் உள்ளடங்கலாய் தொடர்புகளுக்கு: விள இல 1073, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(77053)

## மணமக்கள் தேவை

யாழ். இந்துகௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1. லண்டன் மார்க்கில் 14 வருடங்களாக வசித்துவரும் நிரந்தர விசா பெற்ற, இடபராசி, மிருகசீரிட நட்சத்திரம் 1968 - 12 - 05 இல் பிறந்தவரும் 2000 மார்கழி இலங்கைவர இருப்பவருக்கும் 2. யாழ் பெரிய கடையில் சொந்த வியாபாரம் செய்யும் கன்னிராசி, சித்திரை நட்சத்திரம் 7 இல் செவ்வாய் பிறந்தவருக்கும் பொருத்தமான மணமக்களை பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: விள இல. 1070, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(76878)

# 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்

06-08-2000



அமரர்

## நாகநாதி கிருஸ்ணன்

(கொக்கோ)

அன்னை மடியில் 03-08-1932

ஆண்டவன் அடியில் 10 05-2000

நாகம்மை பதம் தொழுது நான்காறு
மாதம் வேண்டி நாகநாதி பெற்றெடுத்த
நல்விதயக் கிருஸ்ணரே பூவாழும்
வேந்தர் படை சாவோலை எழுதி விட்டார்.
பூவிதழ் போல் ஒடிந்து விட்டீர்
புழுவாகத் துடிக்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள், சகோதரி,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

நயினா தீவு,
எட்டாம் வட்டாரம்.

(77049)

# அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## திருமதி இராமநாதன் சின்னப்பிள்ளை

தோற்றம்: 15 — 06 — 1926

மறைவு: 06 — 07 — 2000

எங்கள் எல்லோரினதும் அன்பிற்கும், பாசத்திற்கும் உறைவிடமாகவிருந்த எங்கள் அன்புக் குடும்பத் தலைவி இறைபதம் அடைந்த செய்திகேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிப்பதுடன் —

இன்று (06 – 08 - 2000) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதன் பின் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால்துயருறும்
**கணவன், மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

வைரவர் கோயிலடி,
புத்தூர்.

(76992)

# கண்ணீர் அஞ்சலி

அரச யாழ். கால்நடை வைத்தியசாலையில்
கடமை புரிந்த

## R. A. இராஜலிங்கம்

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதவிப் பணிப்பாளர்,
கால்நடை வைத்தியர்கள்,
போதனாசிரியர்கள், ஊழியர்கள்.
**கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களம்,**
**யாழ்ப்பாணம்.**

(77051)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 22 — 07 — 1923

மறைவு: 07 — 07 — 2000

## திருமதி விசாலாட்சி தில்லையம்பலம்

எமது அன்புத்தாயார் அணைந்துவிட்ட வேளையில் எமது துயரில் நேரடியாகவும் தொலைபேசி, கடிதங்கள் மூலமாகவும் தொடர்புகொண்டு ஆறுதல் கூறிய உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் ஸ்ரீலங்கா ரெலிக்கொம், அஞ்சல் திணைக்கள சக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் -

இன்று (2000-08-06) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளில் பங்குகொள்வதுடன் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**குடும்பத்தினர் சார்பாக**
**ரங்கா - சுந்தரலிங்கம்**

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(77028)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் விக்ரர் தம்பிராசா கனகசுந்தரம்

(ஓய்வுபெற்ற குடிவரவு, குடியகல்வு அதிகாரி)

அன்னை மடியில் 02-08-1920

ஆண்டவன் அடியில் 06-08-1996

நல்ல போராட்டத்தைப் போராடினீர்கள்
ஓட்டத்தை முடித்துக் கொண்டீர்கள்
விசுவாசத்தைக் காத்துக் கொண்டீர்கள்.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

"இரஞ்ஜஸ்ரான்".
ஏழாலை வடக்கு, ஏழாலை.

(76995)

## மாணவருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஒக6

சாவகச்சேரி சக்தியம்மன் தமிழ்க் கலவன் பாடசாலை, சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு பரீட்சை எழுதுவதற்கான ஆயத்தங்களுடன் கரவெட்டி திரு இருதயக்கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு அதிபர்கள் கேட்டுள்ளனர்

(க-15)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக.6

இரண்டாயிரமாம் ஆண்டில் கலைப்பிரிவில் வெளிவாரிப் பரீட்சைக்குத் தோற்றிய முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு ஆரிய குளம் சந்தியில் உள்ள புதியஉயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக கலந்துரையாடலில்பிரிவு பசார நிகழ்வு தொடர்பாக ஆராயப் படவுள்ளதால் மாணவர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு கேட்கப் பட்டுள்ளது.

(க-10)



கைதடி இல்லத்தைச் சேர்ந்த வயோதிபர்கள் நேற்று மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியில் தங்கவைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்களில் மேலும் சிலவற்றை இதில் காணலாம்.

# கைதடி வயோதிபர்கள் 126 பேர் மூளாயில் தங்கவைக்கப்பட்டனர்

வலிகிழக்கு,ஒக.6

கைதடி முதியோர் இல்லத்தில் இருந்து அழைத்துவரப்பட்டு வடலியடைப்பில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டிருந்த வயோதிபர்கள் 126 பேர் மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியில் அவர்களுக்கென அமைக்கப்பட்ட விடுதியில் நேற்று அனுமதிக்கப்பட்டனர்.

ஈ.பி.டி.பி அமைப்பின் ஏற்பாட்டில் இந்த வயோதிபர்களை தங்க வைப்பதற்கான வசதிகள் மூளாய் ஆஸ்பத்திரியில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

வடலியடைப்பிலிருந்து வயோதிபர்களை வரகனங்களில் அழைத்து வந்து மூளாய் ஆஸ்பத்திரியில் தங்க வைக்கும் வைபவம் நேற்று நடைபெற்றது.

மூளாய் ஆஸ்பத்திரிக்கு அழைத்து வரப்பட்ட வயோதிபர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று வைத்தியசாலை கேட்போர் கூட மண்டபத்தில் வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வலி.தென்மேற்கு பிரதேச செயலர் நா.வேதநாயகன், கைதடி முதியோர் இல்ல பொறுப்பதிகாரி திருமதி.துரைரட்ணம் இராஜேஸ்வரி, மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைத் தலைவர் எஸ். இரட்ணசிங்கம், சுழிபுரம் ஆயுள்வேத வைத்திய கலாநிதி க.பரமசிவம், வலி.மேற்கு பிரதேசசபை உத்தியோகத்தர் கே.சண்முகரட்ணம், திட்டமிடல் பணிப்பாளர் கே. தர்மராஜா ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

இறுதியில் இந்த வயோதிபர்களுக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான உடுபுடைவைகளை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே. ஜெகன் சார்பில் வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திரிலோகநாதன் வழங்கிக் கௌரவித்தார்.

யுத்த நிலைமை தீவிரமடைந்த சமயத்தில் கைதடியில் உள்ள வயோதிபர் இல்லத்தில் சிக்குண்டு இருந்த இந்த வயோதிபர்கள் அண்மையில் செஞ்சிலுவை சர்வதேச குழு மேற்கொண்ட முயற்சியால் அங்கிருந்து அழைத்து வரப்பட்டு வடலியடைப்புப் பகுதியில் தங்க வைக்கப்பட்டது தெரிந்ததே.

(ஐ-180-99)

உ

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

விக்கிரம வருஷ

ஆவணித் திருவிழா 2000

★ விசேட உற்சவ தினங்கள் ★

| | |
|---|---|
| கொடியேற்றம்: | ஆடி மாதம் 23 ஆம் நாள் (07-08-2000) திங்கட்கிழமை முற்பகல் 11 மணி. |
| சப்பறத் திருவிழா: | ஆடி மாதம் 27 ஆம் நாள் (11-08-2000) வெள்ளிக்கிழமை மாலை 3 மணி. |
| வேட்டைத் திருவிழா: | ஆவணி மாதம் 6 ஆம் நாள் (22-08-2000) செவ்வாய்க்கிழமை மாலை 3 மணி. |
| தேர்த்திருவிழா: | ஆவணி மாதம் 7 ஆம் நாள் (23-08-2000) புதன்கிழமை, வசந்தமண்டபப் பூசை காலை 10 மணி தேரில் எழுந்தருளல், முற்பகல் 11.30 மணி உறியடி உற்சவம், பகல் 1 மணி கிருஷ்ண ஜெயந்தி. |
| தீர்த்தத்திருவிழா: | ஆவணி மாதம் 8 ஆம் நாள் (24-08-2000) வியாழக்கிழமை காலை 8.30 மணி திருவடிநிலைக்கு புறப்படல், முற்பகல் 10.30 மணி தீர்த்தோற்சவம், பிற்பகல் 3.30 மணி கொடியிறக்கம். |
| திருக்கல்யாணம்: | ஆவணி மாதம் 9 ஆம் நாள் (25-08-2000) வெள்ளிக்கிழமை காலை 8 மணி 1008 சங்காபிஷேகம், மாலை 2 மணி திருக்கல்யாணம். |

தினமும் காலை 7.00 மணி முதல் மாலை 5.30 மணி வரையும்
இரண்டு நேரத் திருவிழாக்கள் நிகழும்.

பொன்னாலை
27-07-2000

இங்ஙனம்,
தேவஸ்தான பரிபாலன சபை.

(77036)

'முயற்சி' அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் திறன் விருத்தி மையம்

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

| பயிற்சி நெறி | வேண்டப்படும் கல்வித் தகைமைகள் |
|---|---|
| 1. வையறிங் றீவைண்டிங் | G.C.E. O/L கல்வி கற்றிருத்தல் (கிழமைநாள் வகுப்பு) |
| 2. ரி.வி றேடியோ திருத்துதல் | " " " " " |
| 3. தையல் இயந்திரம் திருத்துதல் | " " " (வாரஇறுதி நாட்கள்) |
| 4. புத்தகம் கட்டுதல் | " " " " " |
| 5. உடையமைத்தல் | " " " (கிழமைநாள் வகுப்பு) |
| 6. தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து | " தமிழ் C உட்பட ஆறுபாட சித்தி " " " |
| 7. தமிழ் தட்டச்சு | " " " (வார இறுதி நாட்கள்) |
| 8. ஆங்கில தட்டச்சு | G.C.E.O/L ஆங்கிலம் C உட்பட ஆறுபாட சித்தி " " |

★ பயிற்சி நெறிகளுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது

பயிற்சி நெறிகள் நடைபெறும் இடங்கள்

★ 1,2,3,4 ஆகிய பயிற்சி நெறிகள் *106, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம* முகவரியில் நடைபெறும்.

★ 5, 6, 7, 8 ஆகிய பயிற்சி நெறிகள் ***TRRO** உபகாரியாலயம், மானிப்பாய் வீதி, உரும்பிராய* என்னும் முகவரியில் நடைபெறும்.

☛ விண்ணப்ப முடிவு திகதி 15-08-2000

விண்ணப்பங்கள்,
*'செயலாளர், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், மானிப்பாய் வீதி, உரும்பிராய்'*
என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

*- நிர்வாகம்.*

(C/12403)

## பிக்குமார் உண்ணாவிரதம்

கொழும்பு,ஒக.6

அரசாங்கம் தாக்கல் செய்துள்ள அரசமைப்புச் சட்ட நகலை வாப்ஸ் பெற்றுக் கொள்ளும்படி கோரி நாளை திங்கட்கிழமை முதல் சாகும்வரை உண்ணாவிரதம இருக்க பிக்குமார் குழுவொன்று தயாராகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள உறுமயவின் ஏற்பாட்டில் புறக்கோட்டையில் இடம் பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்துகொண்ட பிக்குமார்களில் 19 பேரே சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளனர் என்று சொல்லப்படுகிறது.

இதன்படி இந்த உண்ணாவிரதப் போராட்டம் நாளை திங்கட் கிழமை கொழும்பில் ஆரம்பிக்கப் படவுள்ளதாக பௌத்த அமைப்புக்களின் வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'திவியின' செய்தி வெளியிட்டுள்ளது.

(இ-க)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக6

வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளர் செல்லையா கிருஷ்ணராசாவின் ஆக்கமான 'இலங்கை வரலாறு - பாகம் ஒன்று நூல் வெளியீடு நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலகர் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

வரலாற்றுக் கழகத் தலைவர் வி.சிவகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நூல் வெளியீட்டுரையினை பேராசிரியர் அ. சண்முகதாஸும், ஆய்வுரையினை பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயரும் நிகழ்த்துவர். இந்த நிகழ்வில் பல கல்விமான்கள் கலந்து கொள்வர்.

(இ.க)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக.6

அகில இலங்கை அரச சேவை சித்த ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாநகரசபையின் இலவச சித்த ஆயுள்வேத வைத்திய சாலையில் நடைபெறும்.

இன்றைய நிகழ்வில் ஆயுள்வேத வைத்தியசாலைகளின் வளர்ச்சி பற்றிக் கலந்துரையாடப் படவுள்ளது.

(க)

## கூ.சங்கக்கிளையில் பொருள்கள் திருட்டு

நெல்லியடி,ஒக.6

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழுள்ள கல்லுவம் பகுதிக் கிளையில் அண்மையில் சுமார் 16ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இது குறித்து உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் சி.கணபதிப்பிள்ளை நெல்லியடிப் பொலீஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

(ஐ-109)

# புலமைப் பரிசில் பரீட்சை நிலையங்கள் மாற்றம்

தென்மராட்சி,ஒக.6

எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ள 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தென்மராட்சி கல்வி வலயத்தில் பரீட்சை நிலையங்களாக அமைக்கப்பட்ட பின்வரும் பாடசாலைகளின் பரீட்சை நிலையங்கள் வடமராட்சியில் உள்ள பின்வரும் பரீட்சை நிலையங்களில் அமையுமென வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை ஆகியவை கரவெட்டி திரு இருதயக்கல்லூரியிலும் -

சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் ஆகியவை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் -

நாவற்குழி மகா வித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம்ஆகியவை கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்திலும் -

கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம் இமையாணன் அ.த.க.பாடசாலையிலும் -

எழுதுமட்டுவாள் ஸ்ரீகணேசா வித்தியாலயம் புலோலி மெதடிஸ்த மிஷன் த.க.பாடசாலையிலும் -

மட்டுவில் மகாவித்தியாலயம் நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும் -

பளை மத்திய கல்லூரி, வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை ஆகியவை பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் -

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம் ஆகியவை வரணி மகாவித்தியாலயத்திலும் அமைக்கப்படவுள்ளன.

(இ-117)

## விவாதத்தில் சிறிமாணி கலந்துகொள்ளார்

கொழும்பு,ஒக.6

அரசாங்கம் தாக்கல் செய்துள்ள அரசமைப்புச் சட்டநகல் தொடர்பான விவாதத்தின் போது தாம் கலந்து கொள்ளப்போவதில்லை என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் அணி) தலைவர் சிறிமாணி அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பு சட்ட நகலில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாது எனவும் -

தங்கள் கட்சியை இது தொடர்பான விவாதத்தின் போது அழைக்கவில்லை என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பான நீண்ட விளக்கத்தை கடிதம் மூலம் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாகவும் அவர்சொன்னார்.

(இ-க)

# பத்திரிகையாளர் விருது வழங்கும் விழா இன்று

## மட்டக்களப்பில் நடைபெறுகிறது

மட்டக்களப்பு,ஒக.6

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் விருது வழங்கும் விழா மட்டக்களப்பு பி.ஐ. ஆர்.ஆர்.பி. மண்டபத்தில் இன்று மு.ப. 10 மணிக்கு ஆரம்பமாகிறது.

பத்திரிகையாளர் டி.சிவராம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பேராசிரியர் கா.சிவத்தம்பி பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார். கௌரவ அதிதிகளாக "வீரகேசரி"யின் பிரதம ஆசிரியர் எஸ். நடராசா, "தினக்குரல்" பிரதம ஆசிரியர் ஆ.சிவநேசச்செல்வன்,"தினகரன்" செய்தி.ஆசிரியர் கே.குணராசா ஆகியோரும் சிறப்பு அதிதியாக "தினக்கதிர்" ஆசிரியர் வீ.சு.கதிர்காமத்தம்பியும் கலந்து கொள்வர்.



விருது பெறும் மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினம்

இவ்வாண்டுக்கான அமரர் எஸ். டி.சிவநாயகம் விருது மூத்த பத்திரிகையாளரும் "தினக்கதிர்" பிரதம ஆசிரியருமான எஸ்.எம். கோபாலரத்தினத்துக்கு (கோபுவுக்கு) இவ் விழாவில் வழங்கப்படும். அவர் எழுதிய "ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை" என்ற நூலும் விழாவில் வெளியிடப்படும். "சரிநிகர்" ஆசிரியர் கே.சிவகுமார் வெளியிட்டுரை நிகழ்த்துவார். பத்திரிகையாளர் அனந்தபாலகிட்ணர் சிறப்புரை ஆற்றுவார்.

(கட்டுரை 9 ஆம் பக்கத்தில்) (அ-21)

# அமைச்சர்கள், எம்.பிக்கள் 40 பேர் பிரபல ஹொட்டேல்களில் தங்கவைப்பு?

## எதிரணியின் குற்றச்சாட்டை அரசு மறுக்கிறது

சில ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உட்பட சுமார் 40 நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசு கொழும்பில் உள்ள இரு பிரபல ஹொட்டேல்களில் தங்கவைத்துள்ளதாக எதிர்க் கட்சியினர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டை ஆளும் கட்சி அரசியல்வாதிகள் மறுத்துள்ளனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக ஆளும் கட்சி எம்.பிக்களில் சிலர் இரு ஹொட்டேல்களிலும் அரசவிருந்தினர் மாளிகையான விசும்பாயாவிலும் தங்கவைக்கப்பட்டிருப்பதாக ஆளுங்கட்சி அரசியல்வாதி ஒருவர் கூறியதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

உத்தேச அரசமைப்பைச் சட்டமாக்குவதற்கு ஆதரவு பெறுவதற்காக அரசு தனது நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் முறையற்ற விதத்தில் பேரம்பேசுவதாக எதிரணியினர் குற்றஞ்சாட்டி இருந்தனர். ஆனால் இதைத் திட்டவட்டமாக மறுத்திருக்கும் ஆளும் கட்சி அரசியல்வாதி ஒருவர், பாதுகாப்புக் காரணங்களுக்காகவே ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஹொட்டேல்களில் தங்க வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

தலா இரண்டு கோடி ரூபா வழங்கி ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தம்பக்கம் இழுக்க அரசு முயன்று வருவதாகவும் -

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அரச வங்கிகளில் பெருந்தொகையைக் கடனாகப் பெற்றிருப்பதால் அவர்கள் ஆதரவுதர முன்வந்தால் அந்தக் கடன் தொகையை ரத்துச் செய்வது உட்பட பல சலுகைகள் வழங்கப்படும் என்றும் அரசாங்கத் தரப்பில் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் -

அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுவதாக கொழும்பு பத்திரிகைகளில் நேற்று செய்தி வெளியாகி இருந்தது.

இதேவேளை -

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதற்காக அவர்களுடன் பேச்சு நடத்திவருகிறோம். சரியாக எத்தனை பேர் எம்பக்கம் வருவார்கள் என்பதைக் கூறமுடியாது என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜெயரத்ன கூறியுள்ளார். (ஐ-6)

# தேர்தல் முறை மாற்றத்துக்கான 17 ஆவது சட்டத் திருத்தம்

## நாளை உயர்நீதிமன்றத்திடம்

தேர்தல் சீர்திருத்தங்களுக்கு வகைசெய்யும் விதத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் அரசமைப்புக்குக் கொண்டு வரப்படும் 17ஆவது திருத்தம் நாளை உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு வருகின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், புளொட், முஸ்லிம் காங்கிரஸ் உட்படப் பல முக்கிய கட்சிகள் இந்தச் சட்டத்திருத்தத்தை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வாதாடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதன் மூலம் மட்டும் - சர்வசன வாக்கெடுப்பு மூலம் மக்களின் நேரடி அனுமதி பெறாமலேயே - அதைச் சட்டமாக்குவதற்கு அரசுத் தரப்பு முயன்று வருகிறது.

சர்வசன வாக்கெடுப்பு நடத்தாமல் - நாடாளுமன்றத்தில் வெறும் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் மட்டும் - இதைச் சட்டமாக்க முடியுமா என்பது குறித்து நீதிமன்றம் ஆராய வேண்டியிருப்பதால் அது விரிவான விசாரணைக்கு வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை எதிர்வரும் வியாழக்கிழமை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவர அரசு திட்டமிட்டுள்ளது.

ஆனால் அதற்கிடையில் இந்த அரசமைப்புச் சட்டத்திருத்த மூலம் மீதான தனது விசாரணையை உயர் நீதிமன்றம் பூர்த்தி செய்து முடிவைத் தீர்மானித்து விடுமா என்பது தெரியவில்லை.

### ஜே.ஆர்.ஆட்சியில்...

1980ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசாங்கத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஒன்றால் அதிகரிப்பதற்கு வழிசெய்யும் அரசமைப்புத் திருத்தச் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டதும்-

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவி மற்றும் எண்ணிக்கை மக்களின் சட்டமாக்கும் இறைமையுடன் தொடர்புபட்டது என்பதால் அதில் மாற்றத்தைக் கொண்டு வரும் அந்த அரசமைப்புத் திருத்தமும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கினரது ஆதரவோடு நிறைவேற்றப்படுவதோடு, சர்வசன வாக்கெடுப்பின் மூலம் அதற்கு மக்களின் அனுமதியும் பெறப்படவேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

1977 பொதுத் தேர்தலில் கலவானைத் தொகுதியில் ஐ.தே.கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட அபேரட்ண பிலப்பிட்டிய வெற்றியீட்டியதை ஆட்சேபித்து அந்தத் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சரத் முத்தெட்டுவேகம நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

அந்த வழக்கின் தீர்ப்பு தமக்குப் பாதகமாக மாறக்கூடும் என எதிர்பார்த்த பிலப்பிட்டிய 3 மாதங்கள் நாடாளுமன்றத்துக்கு சமூகம் தராமல் தவிர்க்கவே, அவர் அந்த எம்.பி. பதவியை இழந்துவிட்டதாக நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் அறிவித்தார்.

மீண்டும் அத்தொகுதி எம்.பி. பதவிக்கு அவரையே ஐ.தே. கட்சி நியமித்தது.

இந்நிலையில் கலவானை தேர்தல் முடிவு செல்லுபடியற்றது என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்க அதையொட்டி நடந்த இடைத் தேர்தலில் சரத் முத்தெட்டுவேகம வெற்றியீட்டினார்.

ஆனால் பிலப்பிட்டிய, தாம் அப்போது வகிப்பது ஐ.தே.கட்சியினால் நியமிக்கப்பட்ட எம்.பி. பதவியே என்றும் -

நீதிமன்றம் செல்லுபடியற்றது என்று தெரிவித்த தேர்தலின் மூலம் கிடைத்த எம்.பி. பதவியை அல்ல என்றும் -

சமர்ப்பித்த வாதத்தை அப்போதைய சபாநாயகர் பாக்கீர் மாக்கார் ஏற்றுக்கொண்டு அவரை எம்.பியாகச் செயற்பட அனுமதித்தார்.

இந்நிலையில் இடைத் தேர்தலில் சரத் முத்தெட்டுவேகம வெற்றியீட்டியதாகத் தேர்தல் ஆணையாளரால் விடுக்கப்பட்ட தேர்தல் முடிவு அறிவிப்புக்கு இணங்க நாடாளுமன்றத்துக்கு வரும் சரத் முத்தெட்டுவேகமவுக்கும் நாடாளுமன்றத்தில் இடமளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

இதற்கு வசதியாக எம்.பிக்களின் எண்ணிக்கையை ஒன்றால் அதிகரிக்க வழிசெய்யும் அரசமைப்புத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வர ஜே.ஆர். அரசு முயன்றது.

### உயர் நீதிமன்றம் அன்று அளித்த தீர்ப்பு

ஆனால் ஓர் எம்.பியின் எண்ணிக்கையை அதிகரிப்பது என்றாலும் சர்வசன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியும் பெறப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததால் அந்தத் திருத்தம் அப்படியே இடைவழியில் கைவிடப்பட்டது. பிலப்பிட்டியவும் தமது எம்.பி. பதவியை இராஜினாமாச் செய்து, சரத் முத்தெட்டுவேகம பதவி ஏற்க வழிவிட்டு ஒதுங்கினார்.

ஓர் எம்.பி.பதவியை அதிகரிப்பதற்கு சர்வசன வாக்கெடுப்பை வலியுறுத்திய உயர்நீதிமன்றம் இப்போது சர்வசன வாக்கெடுப்பின்றி ஒட்டுமொத்த தேர்தல்முறையையே மாற்றுவதற்கு அனுமதிக்குமா என்பது சந்தேகமே என்று சட்ட அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தத் தேர்தல் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் 298பேர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்படுவர். இவர்களில் 168 பேர் தொகுதி வாரியாகவும், 30பேர் தேசியப் பட்டியல் மூலமும் 100 பேர் மாவட்டரீதியாகவும் தெரிவுசெய்யப்படுவர். (உ)

### நல்லூர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரிசித்தனர். ஆலயச்சூழலில் சனத்திரள் நிறைந்து காணப்பட்டது.

அதிகாலை 5 மணி முதல் ஆலயச் சுற்றாடலில் வீதிப் பஜனைகள் இடம்பெற்றன. அடியவர்கள் பலரும் அங்கப்பிரதட்சணம் செய்ததையும் அடி அழித்ததையும் காணமுடிந்தது.

ஆலயச் சூழலில் வீதிப் போக்குவரத்து ஒழுங்குகள் நேற்று அமுலுக்கு வந்தன. (ஐ-7)

### அரசமைப்பு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளமாட்டார்கள் என்று பௌத்த பிக்குகள் சம்மேளனத்தின் சார்பில் நேற்று வெளியிடப்பட்ட பகிரங்க வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசமைப்புத் திருத்த நகலை எதிர்க்கும்படி கோரி, பிக்குகள் அமைப்புகள் சார்பில் விடுக்கப்பட்ட இந்த பகிரங்க வேண்டுகோளில் இந்த அரசமைப்பு திருத்த முயற்சிகளை அடக்கி, ஒடுக்கி நாட்டைக் காப்பாற்றும் வரை பிக்குகள் ஓயமாட்டார்கள் என்றும் -

வீதிகளில் இறங்கி அவர்கள் போராட்டங்களில் ஈடுபடுவர் என்றும்-

நாளைமுதல் இந்தப் போராட்டங்கள் பரவலாக்கப்படுவதுடன் தீவிரமாக்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### செஞ்சிலுவை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிக்கும் 'சிற்றி ஒவ் றிங்கோ', வியாழன் முற்பகல் பருத்தித்துறையை வந்தடையும். அன்று பிற்பகலே பருத்தித்துறையில் இருந்து மீளப் புறப்படும் அதுவெள்ளி காலை திருமலைத் துறைமுகத்தை வந்தடைவதோடு அந்த வாரத்தில் இரண்டாவது சேவையைப் பூர்த்தி செய்யும்.

மீண்டும் அடுத்த திங்கள்காலை அடுத்த வாரத்துக்குரிய முதலாவது சேவை திருகோணமலையிலிருந்து ஆரம்பமாகும். (உ)

### மூன்று அடிப்படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயத்திலும் சர்வசன வாக்கெடுப்பு என்ற நிபந்தனையை எந்தச் சந்தர்ப்பத்திலும் கூட்டணி ஏற்காது. குறைந்த பட்சம் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களையாவது நிபந்தனை ஏதுமின்றி வடக்கோடு இணைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்த மூன்று விடயங்களுக்கும் ஏற்ப தற்போதைய சீர்திருத்த நகலுக்கு திருத்தம் கொண்டுவர முயற்சிக்கிறோம். அனேகமாக நாளை இரவுக்கு முன்னர் நாம் அதில் வெற்றி பெறுவோமா என்பது தெளிவாகி விடும்.

இந்த விடயத்தில் நாம் முன்வைக்கும் திருத்தங்களை அரசு ஏற்காது விடில் இந்த அரசமைப்புத் திருத்தங்களை எதிர்ப்பதை - அல்லது ஆதரிக்காமல் விடுவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

இப்படி இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் - உத்தேச அரசமைப்புச் சட்டத்தை ஆதரிக்குமாறு இந்தியாவும் மற்றும் வேறுசில வெளிநாடுகளும் தமிழ்க்கட்சித் தலைவர்களுக்கு தமது தூதர்கள் மூலம் அழுத்தம் கொடுத்து வருவதாக தமிழ்க் கட்சிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-7)

நாளை ஆரம்பம்!
A/L 2002
'செம்மையாக்கல்கள்'
மாலை 4 மணி
கணக்கீடு
D.SAM
SUBRA(14)
சித்தன்கேணி

மலிவு விற்பனை.....! மலிவு விற்பனை......!
காவேரி சில்க்ஸ்
ஸ்தாபனத்தாரின்
மாபெரும்
விசேட ஆடித் தள்ளுபடி விற்பனை
அனைத்து ரக ஜவுளித் திணுசுகளையும் நீங்கள் தெரிவு செய்திட விரையுங்கள்!
காவேரி சில்க்ஸ் யாழ்ப்பாணம்.
காவேரி சில்க்ஸ் குளப்பிட்டி வீதி.
(உயரப்புலம் பிள்ளையார் கோயிலுக்கு அருகில்)
SALE! SALE! SALE! SALE!
(C/12407)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னுத்துரை செல்லம்மா

(இளைப்பாறிய ஆசிரியை)

திருமதி பொன்னுத்துரை செல்லம்மா அவர்கள் நேற்றுமுன்தினம் (04.08.2000) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் பொன்னுத்துரை (அதிபர், அல்வாய் வடக்கு) அவர்களின் அன்புத் துணைவியாரும், திருமதி அருந்ததி, திருமதி செல்வதி, பொ.வேணுகோபால் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இராமநாதன், காலஞ்சென்ற சபாரத்தினம், திருமதி வே.சற்குணதிலகம் (ஆசிரியை, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ரவீந்திரன், ராமராவ், நளாயினி, அனுஷியா, கஸ்தூரி, அஜந்தன், கோபிகா, ஜதூஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (05.08.2000) சனிக்கிழமை மாலை குடும்ப மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்:
பொ.வேணுகோபால்
(மகன்)

*மடத்தடி,*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.*

(C/12410)

## அருணாசலம் திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற உப அதிபர்,
கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம்)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் 40/04 கோயில் வீதி, சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட அ.திருநாவுக்கரசு அவர்கள் நேற்று (05.08.2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி P.M.திருநாவுக்கரசு(ஓய்வுபெற்ற உப அதிபர், கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் Dr.ஈஸ்வரகாந்தன்(University of Nancy, France), திருமதி உமாகாந்தன்(ஆசிரியை, கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம்), திருமதி கண்ணுத்துரை(ஆசிரியை, சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம்), கதிர்காமநாதன்(A.D.E. யாழ்.வலயம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கலாதேவி(பிரான்ஸ்), காலஞ்சென்ற உமாகாந்தன், T.கண்ணுத்துரை, யாழினி ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்சினி, தயாழினி, தர்மினி(பிரான்ஸ்), திருக்குமரன், ஐங்கரன்(சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள்), உமையாள்(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி), கௌதமி (சென்.ஜோண் பொஸ்கோ மாணவி), ஜனார்த்தனன், ஜனனி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2000) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 1.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி P.M. திருநாவுக்கரசு
(மனைவி)

*40/04 கோயில் வீதி,*
*சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

(C/12409)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06-08-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.